
GOKULAM

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

ஜூலை 2007
விலை ரூ.8/-
80 பக்கங்கள்




நான்தான்
ஆல்ப்ஸ் மலை,
என்னைப் பற்றி
தெரிஞ்சுக்கணுமா?
56-ஆம் பக்கம்
போய்ப் பாருங்க!


கோகுலம்

ஜூலை 2007 மலர்: 25 இதழ்: 6

கல்கி
தரம் நிரந்தரம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

உள்ளே...



கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட்லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி
உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்
தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324
தொலைநகல் :
044 - 22251021
மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அன்புள்ள உங்களுக்கு...



'தோன்றின் புகழோடு தோன்றுக' என்றார் வள்ளுவர். இதன் பொருள் என்ன? பிறக்கும்போதே புகழோடு பிறக்க வேண்டும் என்பதா? அல்ல! வாழும் காலத்தில் புகழுடன் இருக்க வேண்டும் என்பதே.

காரணம், இங்கேதான் பிறக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு யாரும் பிறக்க முடியாது. ஆனால், எங்கே பிறந்தாலும் இப்படித்தான் வாழ வேண்டுமென்பதை தீர்மானிக்க முடியும். அதற்குத் தேவையானவை உயர்ந்த குறிக்கோள், தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கடுமையான

தோன்றின் புகழோடு...

உழைப்பு. இதற்கு எத்தனையோ பேரை உதாரணம் காட்டலாம். அவர்களில் ஒருவர்தான் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அப்துல் கலாம்.

ஜூலை மாத இறுதியுடன் அவரது பதவிக் காலம் முடிகிறது. அவருக்குச் சிறப்புச் செய்யும் வகையில் இந்த இதழில் அவரைப் பற்றிய கட்டுரை வெளியிட்டுள்ளோம். படியுங்கள். இவரைப் போன்ற சாதனையாளர்களின் கதைகளை வெளியிடுவது படித்து ஆச்சரியப்படுவதற்கு மட்டுமல்ல, அவரைப் போலவே உயர வேண்டும் என்ற இலட்சியத்தை மனத்தில் ஏற்றுச் செயல்படுத்தவும்தான்! உங்களால் முடியும். செயலாற்றுங்கள்.

அன்புடன்
கோகூ



நன்றி கோகுலமே!

- கோ.ப்ரவீண் குமார், ஆறாம் வகுப்பு, ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி வித்யாலயா, விழுப்புரம்

கொள்ளை! கொள்ளை!

நல்ல நல்ல கதையும்; நல்ல நல்ல பாட்டும்; நல்ல நல்ல படமும்; நல்ல நல்ல சிரிப்பும்; கொள்ளை கொள்ளையாகக் கொடுக்கும் கோகுலம்!

- பண்ருட்டி பரமசிவன், சேலையூர்

உலகம் சுற்றினேன்!

தெரிந்து கொள்வோம் பகுதி மூலம் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தினம் - உலக சுற்றுச் சூழல் தினம் - உலக ரத்ததான தினம் - தந்தையர் தினம் ஆகியவை பற்றி முழுமையாகத் தெரிந்து

உலகம் சுற்றிய உணர்வு!

கொள்ள முடிந்தபோது, உலகம் சுற்றிய உணர்வு பிறந்தது.

- ஆர்.கே.கார்த்திக், எட்டாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி, திசையன்விளை

டைம் டேபிள்!

கோகுலம் அளித்த டைம் டேபிளை நிரப்பி வைத்துக் கொண்டேன். அது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.



வீர வணக்கம்!

வீர இளைஞர் பகத் சிங் பற்றி அளித்த தகவல்களைப் படித்து மனம் பெருமையடைந்தது. தாய் நாட்டுப் பற்று மிக்க வீரருக்கு எங்களின் வீர வணக்கம்!

- வளர்மதி மனோதாஸ், கொட்டாரம்

பயனுள்ள கட்டுரை!

கோடை விடுமுறை முடிந்து மீண்டும் பள்ளிகள் திறக்கப்பட இருக்கும் இச்சூழலில் டாக்டர் பக்கம் பகுதியில் இடம் பெற்ற 'பள்ளி பயம் போயாச்சு'! மிகவும் பயனளிக்கும் வகையில் இருந்தது.

-வி.வேல்முருகன், சேலம்

சிறுகதை!


முயற்சியும் ஒற்றுமையும் இருந்தால் எதுவும் முடியும் என்பதை 'சிம்புவும் சிவப்புப் பழங்களும்' சிறுகதை அழகாக உணர்த்தியது.

- ஆர்.கார்த்திக், சென்னை

பாதி பக்கெட்!


கதை: கே.பி.அகல்யா,ஆறாம் வகுப்பு,வேல்ஸ் வித்யாஷ்ரம்,பல்லாவரம்.
படம்: பிள்ளை

கண்ணம்மாவுக்கு இரக்க குணம் அதிகம். நல்ல விஷயம்தான். ஆனால் அது சில சமயங்களில் தொல்லையாகவும் முடியும்.




அடுத்த நாள் காலை...
வா, முத்தம்மா இன்றையில் இருந்து நீ இங்கே வேலை செய்யலாம். சம்பளம் ஐநூறு ரூபாய்.
ரொம்ப நன்றிம்மா.
போய் துணிகளைத் துவைச்சுப் போடு.
துணிகளை எப்படித் துவைக்கறது?
பாதி பக்கெட் தண்ணீரில் சோப்பு பவுடரைப் போட்டு அதில் துணிகளை ஊற வை.
புரிஞ் சுடுச்சு. நிமிஷத்துல முடிச் சுடறேன்.
கண்ணம்மா சமையலில் கவனமாய் இருக்க...
கரக்...கரக்...
பின்னாடி என்ன சத்தம்?


கண்ணம்மா கிணற்றடிக்குச் சென்று பார்க்க அங்கே...
முத்தம்மா என்ன இது? என்ன செய்துட்டு இருக்கே?
நீங்கதானே பாதி பக்கெட்ல தண்ணீர் ஊற்றச் சொன்னீங்க...


... இங்கே எல்லாமே முழு பக்கெட்தான் இருக்கு. அதான் பாதி பக்கெட்டை வெட்டிட்டு இருக்கேன்.
அடக் கடவுளே...!

தேடி வரும் கோகுலம்; படிக்க படிக்க குதூகலம்!



பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



கண்மணிகளின்

சந்தனகிரி என்ற ஊரில் ஒரு கூட்டம். குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் பள்ளிக் குழந்தைகளின் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். ஐம்பத்தாறாயிரம் குழந்தைகள் அங்கே கூடியிருந்தார்கள். பவானி என்ற பெண்

''பவானி! ஒரு வேளை, மிக துரதிர்ஷ்டவசமாக, உனது பெற்றோரே அந்த மாதிரி தப்பில் ஈடுபட்டால், அதை நீ எதிர்ப்பாயா...?''

பவானி மட்டுமல்ல; கூட்டத்தில் இருந்த எல்லோருமே ஸ்தம்பித்துப் போனார்கள். பிறகு கலாம் கூட்டத்தில் அனைவரையும் நோக்கிக் கேட்டார்.

அல்பக் ஜெயின் அலாவுதீன் மரக்காயர் - ஆஷியம்மா தம்பதிக்கு ஏழு குழந்தைகள். அவர்களில் ஏழாவது பிள்ளைதான் அபுல் பக்கீர் ஜெயினலாவுதீன் அப்துல் கலாம். சுருக்கமாக ஏ.பி.ஜெ. அப்துல் கலாம். பிறந்தது 1931ஆம் ஆண்டு அக்டோபர் 15.

எழுந்து நின்று கேட்டார் : ''ஐயா! இந்தியாவில் லஞ்ச - ஊழலை நம்மால் ஒழிக்கவே முடியாதா...?''


அப்துல் கலாம் சொன்னார்,

''எத்தனை பேர் தைரியமாக எதிர்ப்பீர்கள்...?''

மெள்ள, மெள்ள உயர ஆரம்பித்த குழந்தைகளின் கைகள் சில வினாடிகளில் மளமளவென்று பல்லாயிரக் கணக்கில் உயர்ந்தன - பவானியின் கையும்தான்!

கலாம் அடுத்தாற்போல், அங்கு வந்திருந்த

சீதா ரவி





பெற்றோரை நோக்கிக் கேட்டார். ''உங்கள் குழந்தைகள் நீங்கள் செய்யும் தவறுகளை எதிர்த்து முறையிட்டால் நீங்கள் அதற்குக் கட்டுப்பட்டு மாறுவீர்களா...?''

தென்னிந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற சென்னை தொழில்நுட்பப் பயிலகத்தில் [எம்.ஐ.டி.] சேர்ந்த கலாம், தமது குழுவினருடன் சேர்ந்து 'போர் விமானம்' ஒன்றைத் தயாரித்து அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

அவ்வளவு பெற்றோரும் ''மாறுவோம்'' என்று கை உயர்த்தினார்கள்!

குடியரசுத் தலைவர் பொறுப்பிலிருந்து ஜூலை 24 அன்று

நாயகன்!



எப்படி நடக்குது ஜனாதிபதி தேர்வு?

வரவிருக்கும் குடியரசுத் தலைவர் தேர்தலில் நமது நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளின் உறுப்பினர்களும், அனைத்து மாநில சட்டமன்ற உறுப்பினர்களும் வாக்களித்து, புதிய குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்.

அமெரிக்க குடியரசுத் தலைவரைப் போல் இந்திய குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுவதில்லை; இந்திய குடியரசுத் தலைவருக்கு ஆட்சி அதிகாரமும் கிடையாது. ஆலோசகர் என்ற நிலையில் இருந்து கொண்டு ஆட்சியாளர்களை அவ்வப்போது நெறிப்படுத்தி, எச்சரித்து, வழிகாட்ட மட்டுமே முடியும்.

ஆனால் பல அறிஞர்களும் சிந்தனையாளர்களும் நமது நாட்டின் குடியரசுத் தலைவர் பதவியை அலங்கரித்து, முக்கியமான கால கட்டங்களில் வழிகாட்டியிருக்கிறார்கள்.



ஓய்வு பெறும் அப்துல் கலாம் உங்களைப் போன்ற குழந்தைகள்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்குச் சான்று இந்தச் சம்பவம்.

எதையும் ஆக்கபூர்வமாகப் பார்ப்பது, பிரச்னைகளுடன் வருவோரையே அவற்றுக்குத் தீர்வு காணச் செய்வது, எப்போதும் தேசத்தின் முன்னேற்றத்துக்காகச் சிந்திப்பது என்று அப்துல் கலாம் பல உயர் பண்புகள் படைத்தவர். கவிஞர், கட்டுரையாளர், பேச்சாளர் என பல்வேறு ஆற்றல்கள் கொண்டவர்.

அவர் குடியரசுத் தலைவர் ஆவதற்கு முன்னரே உலகெங்கும் அறியப்பட்டிருந்தார் - மிகச் சிறந்த ராக்கெட் விஞ்ஞானியாக!


ராமேஸ்வரத்தில், எளிய குடும்பத்தில் பிறந்து கஷ்டப்பட்டு உழைத்து முன்னுக்கு வந்தார் கலாம். அதனால் அவருக்கு உழைப்பின் அருமையும் தெரியும், வறுமையின் கொடுமையும் நன்றாகவே தெரியும். 2020ஆம் ஆண்டுக்குள் இந்தியாவிலிருந்து வறுமையை விரட்டி, நாட்டை வல்லரசாக மாற்ற ஒரு திட்டம் வகுத்தளித்திருக்கிறார்.

பெரிய பொறுப்பில் இருந்தாலும் சிறிய

▶▶ *விமானப் படையின் விமானியாகப் பணிபுரிய விண்ணப்பித்தார். ஆனால் அதில் தோல்வியடைந்தார். அதேசமயம் பாதுகாப்பு அமைச்சகம் நடத்திய தேர்வில் பங்கேற்று முதுநிலை விஞ்ஞானியர் உதவியாளரானார்.* ◀◀

விஷயங்களை கவனித்துச் செய்வார். ஒரு முறை ராஷ்டிரபதி பவனில் அவரைச் சந்திக்கச் சென்ற போது, நாம் அளித்த

> **இராணுவ பயன்பாட்டுக்காக 'நந்தி' என்ற பெயரில் ஹோவர் ரக விமானத்தை உருவாக்கினார். ஆனால் அது ஏற்கப்படாததால் தோல்வியில் முடிந்தது. அதே சமயம் மும்பையில் இந்திய விண்வெளி ஆய்வுக்குழு அழைக்க, அங்கே ராக்கெட் இன்ஜினியராகச் சேர்ந்து பல்வேறு சாதனைகள் புரிந்தார்.**



கோகுலம் இதழ்களைப் பார்த்து குழந்தை போல் முகம் மலர்ந்தார். விடை பெற்றுக் கிளம்பியபோது, "எப்படி வந்தீர்கள்? நீங்கள் வீடு திரும்ப வாகனம் இருக்கிறதா?" என்று

முதல் விஞ்ஞானி!

இந்த உலகத்தின் முதல் விஞ்ஞானி யார்?

கேள்விகளால் மட்டுமே விஞ்ஞானம் பிறந்தது. நீடித்திருக்கிறது. கேள்வி எழுப்புவதில்தான் விஞ்ஞானத்தின் ஒட்டுமொத்த அடித்தளமும் அடங்கியுள்ளது. முடிவில்லாத கேள்விகளின் ஊற்றாக இருப்பவர்கள் குழந்தைகள்தான். ஆகவே, குழந்தைதான் உலகத்தின் முதல் விஞ்ஞானி!

- எழுச்சி தீபங்கள் நூலில் அப்துல் கலாம்

கனிவுடன் விசாரித்தார்!

அன்பே வடிவானவர் அப்துல் கலாம்; தன்னலமற்றவர், நேர்மையாளர் என்பதால் தான் அவரே மீண்டும் குடியரசுத் தலைவராக வேண்டும் என்று பலர் விரும்புகிறார்கள். ஆனால் கலாமுக்கு அதில் அவ்வளவாக இஷ்டமில்லை.

ஆசிரியராகப் பணிபுரியும் தமது விருப்பத்தை நேரடியாகவே சொல்லி விட்டார். கனவு காணுங்கள் என்று சொல்லி மாணவர்கள், இளைஞர்கள் மனத்தில் எழுச்சியை ஏற்படுத்திய கலாம், ராஷ்டிரபதி பவனைவிட்டுச் சென்றாலும் ஒவ்வோர் இந்தியனின் நினைவுகளில் நாயகனாக இருப்பார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

தம்மிடம் ஒப்படைத்த 'ஜனாதிபதி பதவி' என்ற பொறுப்பைச் சீரிய முறையில் செய்து முடித்த கலாமுக்கு நன்றி சொல்வோம். புதிதாக வரவிருக்கும் ஜனாதிபதியை வாழ்த்தி வரவேற்போம். ●

வின்னர்ஸ்

கோடை விடுமுறைப்

கோகுலம் மே இதழில் அறிவித்த கோடை விடுமுறைப் போட்டி - 2 முடிவைப் பார்ப்போமா! ஒரு கோழியும் சிறுமியும் உள்ள படத்தைக் கொடுத்து மூன்று விதமாகப் போட்டியை வைத்தோம். வண்ணம் தீட்டுவதற்கு பரிசு ரூ.500/-, ஜோக் எழுத ரூ.250/- கவிதைக்கு ரூ.250/- ஒவ்வொரு பிரிவிலும் ஐந்தைந்து பேர் தேர்வு செய்யப்பட்டு, பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும் என்பது விதிமுறை.

வண்ணம் தீட்டும் பகுதிக்கும் ஜோக் பகுதிக்கும் நிறைய அனுப்பி அசர வைத்துவிட்டீர்கள்! ஆனால் கவிதைக்கு ஒன்றிரண்டே வந்தன. அவையும் சிறப்பாக இல்லை.

ஆகவே, கவிதைக்கான பரிசை ஜோக் குடன் இணைத்து விட்டோம். வண்ணம் தீட்டுங்கள் பகுதிக்கு வந்தவற்றில் நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து இங்கே.

ஒவ்வொன்றும் தலா ரூ.100/- பரிசு பெறுகிறது.



தி.சௌந்தர்யா,
மூன்றாம் வகுப்பு,
ஸ்ரீசங்கர வித்யாலயா
மேல்நிலைப் பள்ளி,
பாண்டிச்சேரி.



எம்.லட்சுமி நாராயணன்,
இரண்டாம் வகுப்பு,
பாய்ஸ் மெட்ரிகுலேஷன்,
திருச்சி

போட்டி-2 முடிவு!





கே.பி.விஷ்வநாத்,
யு.கே.ஜி.,
வேல்ஸ் வித்யாஷ்ரம்,
சென்னை



M.S.அஹ்மத் ஃபைசல்
முதல் வகுப்பு,
பேர்ல் மாண்டிஸரி
ப்ரைமரி பள்ளி,
கீழக்கரை



ஆர்.ஜோட்சனா,
முதல் வகுப்பு,
ஹோலி ஏஞ்சல்ஸ்,
சேலம்



முட்டை பொறிச்ச கோழி!

சிறுமி : ஏய் கோழி, ஏன் இப்படி பண்ணிட்டே?

கோழி : நான் என்ன செய்யறது. முட்டைதான் போட்டேன். அது கத்திரி வெயில்ல ஆம்லெட்டாயிடுச்சு.

- கே.பி.அகல்யா, ஆறாம் வகுப்பு, வேல்ஸ் வித்யாஷ்ரம், சென்னை

சிறுமி : முட்டையை ஏன் உடைச்சே?

கோழி : எத்தனை நாளைக்கு தான் குஞ்சு மட்டும் பொறிக்கிறது. ஒரு சேஞ்சுக்கு முட்டையைப் பொறிக்கலாமேன்னு தான் உடைச்சேன்!

- எம்.ஜாஸிம் ஃபஹத், கீழக்கரை

கோழி : ஏன் இப்படி நடு ரோட்டுல முட்டையைப் போட்டு உடைச்சிட்டே?

சிறுமி : அடிக்கிற வெயிலுக்கு ரோட்டு லேயே 'ஆம்லெட்' போடலாம்னாங்க அதுதான்.

- ஜி.லலித், ஆறாம் வகுப்பு, பி.ஏ.சி.எம். மேல்நிலைப் பள்ளி, இராஜபாளையம்

கோழி : பாப்பா! நா, போட்ட இரண்டு முட்டையும் உடைஞ்சு போச்சே! என்னோட சேவல் வந்து கேட்டா, என்ன பண்ணுவேன்...?

சிறுமி : கவலைப்படாத கோழி! எனக்கு மத்தியானம் சத்துணவுல, இரண்டு முட்டை குடுப்பாங்க! அத, அப்படியே உன்கிட்ட கொண்டாந்து குடுத்துடறேன்...

- டி.தாமினி, திருவண்ணாமலை

கோழி : ஐய்யய்யோ! நான் போட்ட முட்டை உடைஞ்சிடுச்சே! இப்ப என்ன பண்றது?

சிறுமி : சரி சரி ஃபீல் பண்ணாதே! எங்க வாத்யார் நிறைய முட்டை போடுவாரு. அதுல உனக்கு ஒண்ணு தர்றேன்.

- எஸ்.ஜெயப்ரியா, தேனூர்



என் சொத்து!

பெரியவர்கள் சொன்ன குட்டிக் கதைகள் - 4

ஒரு கவிஞர் கொல்லப்பட்டறை வழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்போது அந்த கொல்லப்பட்டறையிலிருந்து யாரோ சத்தமாகப் பாடுவது கேட்டது.

நின்று கவனித்த கவிஞர், அந்தக் கொல்லப்பட்டறையில் நுழைந் தார். அதன் சொந்தக்காரன்தான் பாடிக் கொண்டிருந்தான். கவிஞர் 'விடுவிடு'வென சென்று, அங்கிருந்த பொருட் களை கலைத்தார். அங்கும் இங்குமாக வீசினார்.

இதைக் கண்ட அவன் ''ஏய்... யாரப்பா நீ? எதற்காக பொருட்களை இப்படித் தாறுமாறாக கலைக் கிறாய்?'' என்று கோபத்துடன் கேட்டான்.

''ஏன், செய்தால் என்ன?'' என்று கேட்டார் கவிஞர்.

''என்னவா? இவை என் சொத்துக்கள்'' என்றான் அவன்.

''அதுபோலதான் நீ இப்போது பாடியது என்னுடைய கவிதை. என் சொத்து! ஆனால் அதன் வரிகளை மாற்றி, உன் வாய்க்கு வந்தவாறு பாடிக் கொண்டிருக் கிறாய். என் சொத்தை இப்படி தாறுமாறாகக் கலைக்கிறாயே, எனக் குக் கோபம் வராதா?'' என்று கேட் டார் கவிஞர்!

கொல்லனுக்கு வெட்கமாகிவிட் டது. ''மன்னியுங்கள். இனிமேல் சரி யாகப் படித்து, சரியாகப் பாடுவேன்'' என்றான்.



முதல் உறுப்பினர்!



வணக்கம் குழந்தைகளே!

நலம்தானே? 'கோகுலம் சிறுவர் சங்கம்' தனது முதல் உறுப்பினரை இதோ அறிமுகப்படுத்துகிறது.



* ஆர்.ஜி.காயத்ரி

நா.வருண்,
எட்டாம் வகுப்பு, அழகப்பா
மெட்ரிக் மேனிலைப் பள்ளி,
காரைக்குடி.




இந்த வருண் யார் தெரியுமா? இரு பத்தைந்து வருடங்களுக்கு முன்பு 'கோகுலம் சிறுவர் சங்கம்' உருவாக காரணமாக இருந்த குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா அவர்களின் பேரன். ஆம்! வள்ளியப்பா வின் மகளான தேவி நாச்சியப்பன் அவர்களின் மகன்! இவரை முதல் உறுப்பினராக அறிமுகம் செய்வதில் கோகுலம் பெருமைப்படுகிறது.

இரண்டாவது உறுப்பினர் :

ஆர்.ஜி.காயத்ரி,
பதினோராம் வகுப்பு, உலக மீட்பர் பள்ளி,
திசையன்விளை.

* நா.வருண்



அடுத்த இதழ் முதல் மற்ற உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் விவரங்கள் தொடர்ந்து வெளியாகும். இந்த இதழில் 62-ஆம் பக்கத்தில் சிறுவர் சங்கம் குறித்த விவரங்களும் கூப்பனும் வெளியாகியுள்ளன. ஏற்கெனவே கூப்பனை அனுப்பி விட்டவர்கள், நண்பர்களைச் சேர்க்கலாம்.

எல்லாரும் சேர்ந்து சிறுவர் சங்கத்தை வளர்ப்போம்!



அன்புடன்
ஆசிரியர்




ராஜசகாயம், தெய்வசகாயம்!

கதை : எஸ். மதுசூதனன் படம் : கலா




அவருக்கு வீடு கொடுத்து மாதம் தவறாமல் சம்பளம் கொடுப்பது நீங்கள். ஆனால், இறைவனால்தான் எல்லாம் நடக்கிறது என்கிறார்...
...ராஜேந்திரனோ உங்களையே இறைவனாக நினைக்கிறார்.
நீ சொல்வது உண்மைதான். நாளை ஒரு வேடிக்கை செய்கிறேன்.
மறுநாள்...
என்ன இது?
புலவர்களே, இவை அரண்மனைத் தோட்டத்தில் காய்த்த பரங்கிக்காய்கள் ஆளுக்கொன்று பெற்றுக் கொள்ளுங்கள்...
ராஜேந்திரன் வீட்டில்...
இந்தா பவானி...
நேற்றுதான் பரங்கிக்காயைச் சமைத்தேன். அதனால் இதை கடைவீதியில் விற்று காசு கொண்டு வாருங்கள்.
கடை வீதியில்...
அட! தேவேந்திரா நீ என்ன இங்கே?
வீட்டில் விருந்தினர் வந்துள்ளார்கள். அதனால் இன்னொரு பரங்கிக்காயை வாங்க வந்தேன்.



நான் விற்க வந்தேன். இதையே வாங்கிக் கொள்.
சரி ராஜேந்திரா! இதற்குப் பணம் தந்து விடுகிறேன்.
மறுநாள் அரசவையில்...
அரசே, நேற்று நீங்கள் ராஜேந்திரனுக்குக் கொடுத்த பரங்கிக்காயில் பொற்காசுகள் இருந்தன. இந்தாருங்கள்.
ஆனால் இது எப்படி உங்களிடம் வந்தது?
நடந்ததை அறிந்ததும்...
ராஜேந்திரனின் பரங்கிக்காயில் பொற்காசுகளை வைத்தது நான்தான். ஆனால் தெய்வம் அதை உங்களுக்கு கொடுத்துவிட்டது. புலவரே அதை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்.
எல்லாம் தெய்வசகாயம். நன்றி அரசே!

பொங்கல் திருநாள்

தமிழர்கள், விழாக்கள் பல கொண்டாடுகின்றனர். அவற்றுள் ஒன்று பொங்கல் திருநாளாகும். இதனைத் தமிழர் திருநாள், உழவர் திருநாள், அறுவடைவிழா, சங்க்ராந்தி என்று பல

அழைக்கிறோம்.

பெயரிட்டு அழைக்கிறோம்.

க.ஜோதி வெங்கடேஸ்வரன்
ஐந்தாம் வகுப்பு,
ஸ்ரீ வித்யாமந்திர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
இராசிபுரம்.





சுதப்பர்

பி. ஹர்ஷவர்தினி
ஏழாம் வகுப்பு,
எஸ்.ஆர்.டி.எப். விவேகானந்தா
வித்யாலயா, சென்னை.



1. தூய்மையான மனம் உடையவர்கள் அனைத்தையும் தூய்மையாகவே காண்கிறார்கள். - அன்னை ஸ்ரீ சாரதாதேவி.
2. ஹரிநாம சங்கீர்த்தனம் செய்து கொண்டு கைகளைத் தட்டினால் உன் மனதிலுள்ள தீய சிந்தனைகள் அகன்றோடும் - ஸ்ரீ ராமகிருஷ்ணர்.
3. இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் - இம்மூன்றும்தான் நமக்குத் தேவை. - சுவாமி விவேகானந்தர்.
4. பிறரது பாராட்டுக்கும், பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது. - சுவாமி விவேகானந்தர்.

முன்னோர்களின் கைவண்ணம்

குஜராத்தின் சோமநாதர் கோயில் முகமது கஜினியால் அழிக்கப்பட்டது. அக்கோயிலின் அற்புதம் நான்கு சுவர்களுமின்றி நடுவே சிவன் அந்தரத்தில் மிதந்திருந்தது. இறைவனின் அதிசயம் என்று கருதினர் மக்கள். முகமது கஜினி படையெடுத்து அச்சிலையைக் கண்டு பிரமித்தான். நான்கு புற சுவர்களையும் கடப்பாரையால் உடைத்தான்...



சி. காயத்ரி
பதினொராம் வகுப்பு,
நகர மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்.

மா. மம்தா
ஐந்தாம் வகுப்பு,
புனித வளனார் மேல்நிலைப் பள்ளி,
திருவண்ணாமலை.




டாக்டர் இராதாகிருஷ்ணன் வரலாறு

டாக்டர் இராதாகிருஷ்ணன் சென்னை மாநிலக் கல்லூரியில் துணைப் பேராசிரியராய்த் தம் பணியைத் தொடங்கினார். பின்னர் அக்கல்லூரியில் தத்துவப் பேராசிரியரானார். தம் கனிவான தோற்றப் பொலிவாலும் கற்பித்தல் திறத்தாலும் மாணவர் உள்ளங்களைக் கவர்ந்தார். அவர் ஆசிரியர் பணியுடன் நாட்டு விடுதலையிலும் நாட்டம் கொண்டார். அண்ணல் காந்தியடிகள், நேரு போன்ற தலைவர்களுடன் இணைந்து நாட்டு விடுதலைக்குப் போராடினார்.


சட்டமேதை அண்ணல் அம்பேத்கர்

உலகில் மக்களாய்ப் பிறந்தவருள் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்றும் வேறுபாடு இருத்தல் கூடாது. இதனை வற்புறுத்தவே வள்ளுவர் "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" என்று கூறினார். நம் இந்திய நாட்டைப் பல்லாயிரம் ஆண்டுகளாகச் சாதி அமைப்பு துன்பத்துக்கு உள்ளாக்கியது. இந்த நிலையை மாற்ற, கடந்த நூற்றாண்டில் பலர் போராடினர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் அம்பேத்கர். நாம் பிறரிடம் வேறுபாடு காட்டாமல் ஒன்றுபட்டு வாழ்வதே, அம்பேத்கருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாகும்.



நா. ஹரீஷ் ப்ரணவ்
எட்டாம் வகுப்பு,
கிளேஸ் புருக் மேல்நிலைப் பள்ளி
சேலம்.

கையெழுத்து!



கே. கீர்த்தி சாகர்
ஐந்தாம் வகுப்பு,
சரஸ்வதி வித்யாலயா ஜூனியர் பள்ளி,
பூனா.

பொன்மொழிகள்

1) அடக்கம் ஆயிரம் பொன் தரும்
2) ஆத்திரக் காரனுக்கு புத்தி மட்டு
3) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
4) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
5) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

சத்யமேவ ஜெயதே!

ஜி.எஸ்.எஸ்.



• மதன் மோகன் மாளவியா டிசம்பர் 25, 1861-ல் அலகாபாத்தில் பிறந்தார். அவரது குடும்பம் வறுமையில் வாடினாலும் படிப்பறிவில் சிறந்து விளங்கிற்று...

• பட்டப் படிப்பை கல்கத்தா பல்கலைக் கழகத்தில் படித்தார். சட்டப் படிப்பும் முடித்தார். என்றாலும் ஆசிரியர் பணியையே விரும்பிச் செய்தார். மாதச் சம்பளம் நாற்பது ரூபாய். மாணவர்களிடையே மிகப் புகழ் பெற்றவராக விளங்கினார். மாளவியாவின் வகுப்பு என்றால் அத்தனை மாணவர்களின் கவனமும் அங்கு முழுமையாக இருக்கும்.



❋ மாளவியா

• 1886ல் கொல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பார்வையாளராகச் சென்றபோது அங்கு கிடைத்த வாய்ப்பில் பேசினார். அந்தப் பேச்சு ஏ.ஓ.ஹியூமை (காங்கிரஸ் கட்சியை நிறுவியவர்) மிகவும் கவர்ந்தது.

• நாளடைவில் மதன் மோகன் மாளவியா இந்துஸ்தான், இந்திய யூனியன் போன்ற இதழ்களின் ஆசிரியர் பதவியை வகித்தார். பின்னர் அவரே அப்யுக்தா, லீடர் போன்ற இதழ்களைத் தொடங்கினார். இந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழில் 22 ஆண்டுகள் ஆசிரியர் குழுவில் இருந்தார். மாளவியாவின் கட்டுரைகளும் தலையங்கங்களும் தெளிவாகவும் காரசாரமாகவும் இருந்தன.

• 1931 வட்டமேஜை மாநாடு நடந்தபோது காந்திஜியுடன் மதன் மோகன் மாளவியாயும் இந்தியாவின் சார்பில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டார்.

• வழக்கறிஞராகப் பணியாற்ற அவர் விரும்பவில்லை, என்றாலும் 1922ல் 'சௌரி சௌரா' சம்பவத்தில் (இதன் தொடர்ச்சியாகத்தான் காந்திஜி தமது ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்திக் கொண்டார்) 225 இந்தியர்கள் கைது செய்யப்பட்டபோது, அவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடினார். 153 பேரை மரண தண்டனையிலிருந்து காப்பாற்றி னார்.

• 'சத்யமேவ ஜெயதே' (வாய்மையே வெல்லும்) என்ற கோஷத்தைப் பெரிதும் பிரபலப்படுத்தியது மதன் மோகன் மாளவியாதான்.

இனிய அப்பா, அம்மா!

மே இதழில் அறிவித்த போட்டியில் தலா ரூ.250/- பரிசு பெறும் அனுபவங்கள் :



பாசக் கட்டணம்!

அன்று காலை நான் பள்ளிக்குத் தயாரா கிக் கொண்டிருந்தேன். என் அம்மாவிடம் பள்ளியில் ஒரு போட்டிக்குக் கட்டணமாக நூறு ரூபாய் எடுத்து என் புத் தகப் பையில் வைக்கும்படி கூறியிருந்தேன். பிறகு அவசர அவசரமாக பள்ளிக்குச் சென்று விட்டேன். அங்கே சென்று பார்த்தால் பணம் இல்லை. என் மேல் என் பெற்றோருக்கு அக்கறையே இல்லை என்று கோபமாக இருந் தேன். ஒரு வழியாக என் ஆசிரியரிடம் பணம் வாங்கிச் செலுத்தப் போனேன். அப் போது அப்பா வந்து பணத்தைச் செலுத்தி விட்டது தெரிந்தது.

அன்று மாலை வீட்டுக்குச்சென்று என் தந்தைக்கு நன்றி கூறிய போது





"பரவாயில்லை" என்றார். நம் பெற்றோருக்கு நம் மீது அக்கறை இல்லாதது போல் நமக் குச் சில சமயம் தோன்றும். ஆனால், அவர் கள் உள்ளுக்குள் எப்போதும் நம் முன்னேற் றத்தைப் பற்றியே தான் சிந்தித்துக் கொண் டிருப்பார்கள் என்று புரிந்தது.

- கோ.இராகவிஜயா, ஒன்பதாம் வகுப்பு, ஜவகர் பள்ளி, நெய்வேலி

பெற்றோரின் அன்புக் குளியல்!

நான் கிராமத்தில் இருப்பதால் நண் பர்களோடு சேர்ந்து குளத்தில்தான் குளிப்பேன். ஏழு வயது வரை குளத்தில் தான் சந்தோஷமாக குளித்து வந்தேன். ஆனால், ஓராண்டாக என்னை என் பெற்றோர் குளத்தில் குளிக்க விடுவதில்லை. நண்பர்களெல்லாம் குளத்துக்குப் போய் நீச்சலடித்து ஜாலியாய் குளிக்க, நான் வீட்டில் வெந்நீரில் குளிக்கும்படி ஆகிவிட்டது.

என் பெற்றோரிடம் நான் எவ்வளவோ கெஞ்சியும், செவிசாய்க்கவே இல்லை. இதனால் அவர்கள் மீது எனக்கு ஏகக் கோபம். சமீபத்தில் எங்கள் வீட்டுக்கு வந்த குடும்ப டாக்டர், "தம்பி, உன் அப்பா, அம்மா உன்னைக் குளத்தில் குளிக்கவிடவில்லை






என அவர்கள்மீது கோபப் படாதே. உனக்கு வலிப்பு நோய் உள்ளது. அது இரண்டு முறை உனக்கு வந்துவிட்டது. குளத்தில் தனியே குளிக்கும் போது இந்த வலிப்பு வந்துவிட்டால் தண்ணீரில் மூழ்கும் அபாயம் உள்ளது. அதனால் நீ வீட்டிலேயே வெந்நீரில் குளி. அப்பா, அம்மா மேல் உள்ள கோபத்தை விட்டுவிடு'' என்று சொன்னார்.

- ரா.செல்வக்குமார், ஐந்தாம் வகுப்பு,
பி.யூ.பி. பள்ளி, புதுக்கோட்டை

குடும்பச் சுற்றுலா!

ஒருமுறை என் பள்ளியில் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். என் அப்பாவிடம் ''அப்பா நானும் சுற்றுலாவுக்குப் போகிறேன். நானூறு ரூபாய் கொடுங்கள்'' என்று கேட்டேன். அப்போது அம்மா வந்து, ''குடும்பம் இருக்கும் கஷ்டத்தில் நீ போக வேண்டாம். நாம் நமது சித்தப்பா ஊருக்குப் போகலாம்'' என கூறினார். அதனால் நான் எனது அம்மாயி வீட்டுக்குப் போய் நடந்ததைச் சொன்னேன். அங்கேயே தங்கிவிட்டேன். சில நாள் கழித்து எனது அப்பாவும் அம்மாவும் வந்து ''வா நீ, நான், அம்மா, அண்ணன் எல்லோரும் சுற்றுலாவுக்குப் போகலாம்'' என்றார்.

''அப்பாவும் அம்மாவும் பாசம் இல்லை என்றால் இவ்வளவு குடும்ப கஷ்டத்திலும் உன்னை அழைத்துக் கொண்டு போவார்களா? சந்தோஷமாகச் போய் வா'' என்றார் அம்மாயி.



என் பெற்றோரைப் புரிந்துக் கொண்டேன்.

- சி.சுதா, எட்டாம் வ்குப்பு,
ஊ.ஒ. நடுநிலைப் பள்ளி,
பா.மேட்டூர்

பொறுப்புணர்ச்சி!

நான் நான்காம் வகுப்பு முடித்து ஐந்தாம் வகுப்பு போன சமயம்... அப்பொழுது என்னை வேறு பள்ளியில் சேர்க்க என் அப்பா, அம்மா முடிவெடுத்தார்கள். எனக்கு மிக வருத்தமாக இருந்தது. பழைய நண்பர்களை விட்டுப் போக மனம் இல்லை. புதிய பள்ளிக்குப் போனால் எப்படியிருக்குமோ, என்னவோ என்று மறுத்தேன். சாப்பிடாமல், அம்மாவை உதாசீனப்படுத்தினேன். ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி வித்யாலயா மெட்ரிக் பள்ளியில் விண்ணப்ப படிவமும் வாங்கி வந்து என்னை சேர்த்து விட்டார்கள். அந்தப் பள்ளியில் நான் நிறைய கற்றுக் கொண்டேன். பல புத்தகங்களை என் பள்ளி லைப்ரரியில் இருந்து எடுத்து வந்து படிக்கிறேன். அதன் வாயிலாக பல கதை, கட்டுரை, கவிதைகள் எழுத பழகுகிறேன். என் அம்மா, அப்பாவால்தான் நான் இந்த அளவு வந்திருக்கிறேன்.

- கோ.பிரவீண்குமார், ஆறாம் வகுப்பு,
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி
வித்யாலயா மெட்ரிக் பள்ளி,
விழுப்புரம்

தொடர்கதை



என் பெயர் தென்றல்!

ஏதோவொரு குகைப் பாதைக்குள் பாம்பு போல் வளைந்து சென்று கொண்டிருந்தது அந்த ரயில் வண்டி. ஒரு சில நிமிடங்களுக்கு எதுவும் தெரிய வில்லை. இருட்டு! பிறகு, பச்சைப் பசே லென்ற நீண்ட வயல்பரப்பு. பழக்கப்பட்ட பிரதேசம். மரங்கள், செடிகள், ஓடைகள்... ஜன்னல் கம்பியைக் கெட்டியாகப் பிடித்த படி எட்டிப் பார்த்தாள் தென்றல். 'விஷ்க்'கென்று முகத்தில் அறைந்தது காற்று.

சீட்டை விட்டு எழுந்து, நடக்க ஆரம்பித்தாள். காலையிலிருந்து பலமுறை ரயில் பெட்டிக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்துவிட்டாள் அவள். மீண்டும் மீண்டும் நடக்க வேண்டும் போல் இருந்தது. 'தடதட' என்று ஆடும் வண்டியில் எதையும் பிடிக்காமல் தத்தி தத்தி நடந்து செல்வது சுவாரஸ்யமாக இருந்தது. கதவுக்கு அருகே வரும்போது மட்டும் கொஞ்சம் பயம் வரும்.



மருதன் 4

பசித்தபோது, கட்லெட், சமோசா வாங்கிச் சாப்பிட்டாள். ஆஹா, என்ன சுவை! அதுவும் அந்த சாஸ். சிவப்பு நிறத்தில், கொழகொழவென்று... அற்புதம்! எல்லோரும் தன்னையே வேடிக்கைப் பார்ப்பது போல் அவளுக்குத் தோன்றும்.

உட்கார்ந்து வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, தூங்கிவிட்டாள். அரை மணியோ, ஒரு மணியோ தெரியாது. ஒரு பெரியவர் அவள் தோளைத் தட்டி எழுப்பினார்.

''இந்தாம்மா, சென்ட்ரல் ஸ்டேஷன் வந்துடுச்சு இறங்கு.''

வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தாள். குழப்பத்துடன் கண்களைக் கசக்கிக் கொண்டாள். இதுதான் சென்னையா? புத்தகப்பையை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டு, பேந்த பேந்த விழித்தபடி ரயில் பெட்டியிலிருந்து கீழே இறங்கினாள்.

அம்மாடி!

எத்தனை பெரிய ஸ்டேஷன்? தலைக்கு மேலே உசரத்தில் அழகிய கூரை. பளிச் பளிச்சென்று மின்னும் விளக்குகள். 'இது என்ன நகரமா? அல்லது சொர்க்கலோகமா? இதைவிட பிரகாசமாக ஓர் இடம் இருக்க முடியுமா?'

சிவப்பு உடை அணிந்த போர்ட்டர்கள் அங்கும் இங்கும் நடமாடிக்கொண்டிருந்தார்கள். தள்ளு வண்டியில் பெரிய பெரிய பெட்டிகளை, மூட்டைகளை வைத்து உருட்டிக் கொண்டிருந்தார்கள். கண்களை விரித்துப் பார்த்தபடி நடந்துக் கொண்டிருந்தாள் தென்றல்.

ஆ! தொலைக்காட்சிப் பெட்டிகள். தென்றலால் நம்பவே முடியவில்லை. சட்சட்டென்று மாறும் காட்சிகள், கூடவே சத்தங்கள். ஆங், பாடல்கள் அல்லவா அவை? தென்றல் பார்த்துக்கொண்டிருந்தது ஜவுளிக் கடை விளம்பரங்களை. ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சந்தோஷமாகக் குதித்து ஆடிக்கொண்டிருந்தார்கள். கண்ணைப் பறிக்கும் வண்ண ஆடைகள்! அப்படியே உட்கார்ந்து விடலாமா என்று



கூடத் தோன்றியது.

'உண்மையிலேயே இது ஓர் அதிசய பூமியாகத்தான் இருக்க வேண்டும். ஹூம்! இன்னும் என்னென்ன அதிசயங்களைப் பார்க்கவேண்டியிருக்குமோ?'

தலையைத் திருப்பித் திருப்பி டிவி பெட்டியைப் பார்த்தபடி கும்பலோடு கும்பலாக ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்தாள் தென்றல்.

'இனிமேல்தான் எல்லாம் ஆரம்

பிக்கப்போகிறது. முதலில் நல்லபடியாக பஸ்ஸில் ஏறவேண்டும். மைலாப்பூர் செல்ல அரை மணி நேரம் ஆகுமாம். அங்கிருந்து பத்து நிமிட நடை. பழுப்பு கலர் அபார்ட்மெண்ட் வருமாம். இரண்டாவது மாடி. முதல் வீடு. முதலில் பேருந்து நிறுத்தம் எங்கே என்று கேட்கவேண்டும்.'

அருகில் இருந்த பெண்ணை தயங்கித் தயங்கி நெருங்கினாள்.

''மை...மை..லாப்பூர் போகிற பஸ் எங்கே நிக்கும் மேடம்?''

பெண்கள் என்றால் மேடம். ஆண்கள் என்றால் ஸார். ஆனந்தியின் பாடம்!

''வாட்?''

''மைலாப்பூர் பஸ்.''

என்று கேட்டார் பழம் விற்கும் தாத்தா.

''ஆமாம் தாத்தா. எடுத்துக்கவா?''

''ஓ, எடுத்துக்கோயேன்.''

கிளிப்பச்சை நிறத்தில் இருந்த குண்டு கொய்யாவை எடுத்தாள் தென்றல்.

''ரொம்ப நன்றி தாத்தா.''

நடக்க ஆரம்பித்தாள்.

''இந்தா பொண்ணு நில்லு.'' தாத்தா கத்தினார்.

தென்றல் குழப்பத்துடன் திரும்பினாள்.

''கொய்யாவுக்கு யாரு காசு கொடுப்பாங்க? நீ பாட்டுக்குப் போயிட்டே இருக்கே.''

''அட, கொய்யாவுக்குக் கூடவா காசு கொடுக்கணும்?''

“கொய்யாவுக்குக் கூடவா காசு கொடுக்கணும்?”
“தோ பாருடா! ஓசியில கொடுக்கவா நான் இங்கே உட்கார்ந்திருக்கேன்?”

''ஸாரி, ஐ டோண்ட் நோ.''

சொல்லிவிட்டு நகர்ந்துவிட்டாள் அவள்.

'வேறு ஏதோ பாஷை... சென்னையில்தான் எத்தனை விதமான மனிதர்கள் இருக்கிறார்கள்? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாஷை தெரியும் போல. எனில், எப்படி அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள்?' தென்றலுக்குப் புரியவில்லை.

நடைபாதைக் கடைகளை வேடிக்கைப் பார்த்தவாறு நடக்க ஆரம்பித்தவள் திடீரென்று நின்றுவிட்டாள். அருகில் ஒரு தள்ளு வண்டியில் கொய்யா பழங்கள் வரிசை வரிசையாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பளபளக்கும் பச்சை கொய்யா!

''என்னம்மா பழம் வேணுமா?''

''தோ பாருடா! ஓசியில கொடுக்கவா நான் இங்கே உக்காந்திருக்கேன்?''

''அதான் மரத்துல கொத்துக் கொத்தாக் காய்க்குதே! சரி சரி, சொல்லுங்க எவ் வளவு தரணும்?''

''இரண்டு ரூபா,''

திக்கென்றது தென்றலுக்கு. மறுத்து பேசாமல், கேட்ட காசைக் கொடுத்துவிட்டு, சாலையோரம் நின்றிருந்த ஒருவரை நெருங்கினாள்.

''மைலாப்பூர் போறதுக்கு பஸ் எங்கே நிக்கும் ஸார்?''

''இன்னிக்கு மைலாப்பூர் எல்லாம் போக முடியாதேம்மா. பஸ், ஆட்டோ எதுவுமே ஓடாது. ஸ்ட்ரைக்.''

தென்றலுக்குப் புரியவில்லை.

''அப்படின்னா என்ன?''

(தொடரும்)



தும்பியும் வானவில்லும்!

சின்ன சின்ன சிறகுவிரித்துத் தும்பிப் பறந்தது - அது
வண்ணம்மின்னும் வானவில்லைத் தீண்டத் துணிந்தது!
கண்ணில் நூறு கற்பனைகள் சேர்த்துக் கொண்டது - ஒரு
மின்னல்வெட்ட இலையின் முதுகில் மறைந்து கொண்டது!

மறைந்துகொண்ட போதுமது அடுத்த நிமிடமே - மிக
விரைவுடனே வானைநோக்கி பயணம் கொண்டது!

திரைகள்போடும் மேகக்கூட்டம் நெருங்கும் நேரமே - ஐயோ
வரைந்துவைத்த வானவில்லைக் காணவில்லையே!

மாயமான வானவில்லைத் தேடித் தேடியே - முழு
தூயவான எல்லையெங்கும் தாவிச் சென்றது!
சாயம்போன தென்றுயெண்ணி சோகமாகவே - மனம்
காயமாக மேகம்மீதில் சோர்ந்து நின்றது!

சோர்ந்து நின்ற தும்பிகண்டு வானவில்லுமே - அதன்
சோர்வு நீக்க வண்ணம் கூட்டி வந்து நின்றது!
சேர்ந்திருந்த ஏழுவண்ணம் அருகில் கண்டதும் - தான்
சேர்த்துவைத்தக் கற்பனைகள் யாவும் சொன்னது

தும்பிகொண்ட உறுதிகண்டு வண்ண வில்லும்தான் - தன்
தெம்புபோன்ற வண்ணங்களை அதற்குத் தந்தது!
அம்பில்லாத வில்லிலாடி வண்ணம் வாங்கிபின் - தன்
அன்பினாலே நன்றிசொல்லி மண்ணில் வந்தது!


செதில்களெல்லாம் சிறகுகளாய் மாறத் துவங்கினால் - பல
மீன்களெல்லாம் காற்றிலேறி பறவையாகலாம்!
நாளும்வரும் கவலைகளைத் துறக்கத் துவங்கினால் - அட
நாமும்கூட சாதனைகள் படைக்கத் துவங்கலாம்!



ஆலிஸை அளித்த

பிரிட்டனில், நகைச்சுவை எழுத்துக்காகவே பிரபலமானவர் 'லூயி கரோல்' (Lewis Carroll) இவரின் இயற்பெயர் 'சார்லஸ் லுட்விக் டாக்ஸ்டன்' (Charles Lutwidge Dodgson)

இவர் 1832-ஆம் ஆண்டு ஜனவரி 27-ல் வடமேற்கு இங்கிலாந்தில், ஒரு கிராமத்தில் பிறந்தார். இளவயதில் ஆறடி உயரமும், சுருட்டை முடியும், எல்லோரையும் கவரும் நீலநிறக் கண்களும் அமையப் பெற்றிருந்தாலும், கக்குவான் இருமலும், திக்கிய பேச்சும், செவிட்டுத் தன்மையும் இவரைப் பலர் நடுவில் சகஜமாகப் பழக விடாமல் தடுத்தது.



இவர் பேச ஆரம்பிக்கும்பொழுதே திக்கலும் சேர்ந்து விடும். அதனால் சொல்ல வந்ததை முழுமையாகச் சொல்ல முடியாமல் மனத்துக்குள்ளேயே தேக்கி வைத்துக் கொள்வார்.

ஆகவே, பெரியவர்களின் நடுவில் அவரால் சகஜமாகப் பேச முடியாமல் போனது. குழந்தைகளுடன் இருப்பதையே மிகவும் விரும்பினார். அவர்களுடனே தமது பொழுதைக் கழிக்கத் தொடங்கிய லூயி, குழந்தைகளின் மனப்போக்கை ஆராயத் தொடங்கினார். சிறுவர்களின் மனோதத்துவத்தைப் புரிந்து கொண்டு எழுதத் தொடங்கினார்.

பன்னிரண்டு வயது வரை வீட்டுக் கல்வி, பிறகு வீட்டின் அருகிலேயே ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் என்று தம் படிப்பைத் துவங்கிய லூயிக்கு, 1851ல் ஆக்ஸ்ஃபோர்டு உதவித் தொகை வழங்கி மேற்படிப்பைத் தொடங்க உதவியது.

பேசாமல் இருந்தது லூயியின் கற்பனைக்கு உதவியது. தனி ஓர் உலகில் சஞ்சாரம் செய்து, பலவித கதைகள், கவிதைகள் எழுதியதோடு, புகைப்படம் எடுப்பதிலும் தம் ஆற்றலை வெளிப்படுத்தினார்.

1856-ல் இவரின் கதைகள், கவிதைகள், புகைப்படங்கள் யாவும் பத்திரிகைகளில் பிரசுரமாகத் தொடங்கின. முதல் கதைத் தொகுப்பான 'ஆலிஸ் வொன்டர்லேண்ட்' (Alice's in Wonderland) புத்தகம், பரபரப்பாகப் பேசப்

மாலதி சந்திரசேகரன்





லூயி!

பட்டதோடு அல்லாமல், இவருக்கு அதிக அளவில் பொருளையும் ஈட்டித் தந்தது.

வியாதிக்காரன், திக்குவாயன், செவிடன் என்று பலரால் ஒதுக்கப்பட்ட 'லூயி', தம் எழுத்துத் திறமையால், பிரிட்டனில் பலரின் நட்பைப் பெற்றார். அவரைக் கண்டு ஒதுங்கியவர்கள், ஓடோடி வந்து ஒட்டிக் கொண்டார்கள்.

கல்லூரியில் சிறந்த கணிதவியலாளராகவும் திகழ்ந்தார் லூயி. 'தி லுக்கிங் கிளாஸ் (The Looking Glass) என்கிற புத்தகமும், 'தி ஹண்டிங் ஆஃப் ஸ்நார்க் ரைவல்ஸ்' 'த ஆல்ஃப்பெட் சைபர்' போன்ற கவிதைத் தொகுப்புகளும் மக்களிடையே அவரை அடையாளம் காட்டின.

தம்முடைய அறுபத்து ஆறாம் வயதில் நிமோனியா காய்ச்சலால் காலமான 'லூயி கரோல்' பாதிரியாராகவே தம் வாழ்நாளைக் கழித்தார். சவால்களைச் சந்தித்து, வெற்றி கொண்டு எல்லோர் மனத்திலும் சிம்மாசனமிட்டு அமர்ந்தார் லூயி. ○





தெரியுமா?

சந்திரனில் முதன்முதலாக 1969-ஆம் ஆண்டு நடந்தவர் "நீல் ஆர்ம்ஸ்ட்ராங்". அதன் பிறகு 11 பேர் நிலவுக்குச் சென்று திரும்பியுள்ளனர். அவர்களின் பெயர்களும் வருடங்களும் :

வீரர்களின் பெயர்கள்	ஆண்டு
நீல் ஆர்ம்ஸ்ட்ராங்	1969
பஸ் அல்ட்ரீன்	1969
சார்லஸ் பீட் கன்ராட்	1969
அலன்பீயன்	1971
அலன் ஷெபர்டு	1971
எட்கார் மிட்செல்	1971
டேவிட் ஸ்காட்	1971
ஜேம்ஸ் இர்வின்	1971
ஜான் யங்	1972
சார்லஸ் ட்யூக்	1972
யூஜின் செர்னன்	1972
ஹாரிசன் ஜாக் ஷ்மித்	1972





குட்டீஸ் கோகுலம்
உங்கள் சின்னஞ்சிறு கைகள், பளபள கண்கள், சுட்டியான மூளை அனைத்துக்கும் சவால்!



சோபியாவும் சூப்பர் வண்டியும்!
கதை : யுவா
படம் : தர்மா
கோகுலம் காமிக்ஸ்

வண்ணம் தீட்டுங்கள்!



இந்தப் படத்தை
உங்கள் கைவண்ணத்தால்
அழகுபடுத்துங்க!



எத்தனை? எத்தனை?

இங்கே எத்தனைக் கரடிக் குட்டிகள் உள்ளன?
வேகமா எண்ணுங்க பார்க்கலாம்!



விடை:
47-ஆம் பக்கம்




வித்தியாசங்களைக்



இரண்டு படங்களுக்கிடையே எத்தனை வித்தியாசங்கள் உள்ளன?



கண்டுபிடி!



விடை:
47-ஆம் பக்கம்



என்ன இது? என்ன இது?









விடை:
47-ஆம் பக்கம்



இங்குள்ள பொருட்களை அடையாளம் தெரிகிறதா?




1 முதல் 33 வரையிலான புள்ளிகளை இணைத்து உருவத்தைக் கண்டுபிடியுங்கள்!




புள்ளிகளை இணையுங்கள்!




கோகுலம் ஆல்பம்





இங்கேயுள்ள அழகழகான நீர்
பறவைகளைக் கத்தரித்து
நோட்டுப் புத்தகத்தில் ஒட்டிக்கங்க







ட்டையும்

ழ்

ட்டீஸ்!

நெட்டையும்!






யாருக்கு மீன்?




யாருடைய தூண்டிலில் மீன் சிக்கியுள்ளதென சொல்லுங்க பார்க்கலாம்!

விடை: 47-ஆம் பக்கம்




வெட்டுங்கள்




ஒட்டுங்கள்!

இங்குள்ள துண்டுகளை வெட்டியெடுத்து சரியான இடத்தில் ஒட்டுங்கள்!





விடை:
47-ஆம் பக்கம்


துணி பேனர் ஒன்று கிழிந்து
சோபியாவின் முகத்தை மூட...
ஓவ்!
எதிரே ஒரு சிலையை நோக்கி...
தப்பிச்சேன்!
எந்த தலைவர் சிலைன்னு தெரியலை
கை உடைஞ்சு போச்சு!
க்ளிங்...
கடைசி நொடியில் கவனித்து விலகினாள்.

நாங்க எங்கே இருக்கோம்?



கடற்கரையில்
இந்த மூன்று பேரும் எங்கே
இருக்காங்கன்னு கண்டுபிடியுங்க!



என்னைப் போல யாரு?


விடை:
எதிர்ப் பக்கம்
1
2
3
மூணு பேருல என்னை
மாதிரி இருக்கறது யாருன்னு
சொல்லுங்க பார்க்கலாம்!


பின்னாடி என்னடா சத்தம்?
தெரியலையே, நிறுத்துங் கண்ணே பார்க்கலாம்.
லாரி நின்றதும் சோபி குதித்து ஓடினாள்.
இப்ப சொல்ல நேரமில்லே; எனி வே, நிறுத்தினதுக்கு தேங்க்ஸ்!
ஏய் யார் நீ?

விடைகள் பக்கம்



நாங்க இங்கே இருக்கோம்...

வித்தியாசங்கள்

1. குருவியின் வால்
2. அணிலருகே இலைகள்
3. பூக்களின் எண்ணிக்கை
4. பாம்பின் வாலின் நீளம்
5. மரத்தடியில் புற்கள்

யாருக்கு மீன்? : ராமு

எத்தனை? எத்தனை?


பத்து கரடிக் குட்டிகள்

என்னைப் போல யாரு?

எண் : 3

என்ன இது? என்ன இது? விடை:






அடுத்த
குட்டீஸ்
கோகுலம்
வித்தியாசமாய்...
கலகலப்புடன்...
செம ஜாலி!
ஒரு மாசம் வெயிட் பண்ணுங்க!
ஆடுங்க... விளையாடுங்க!!


அடுத்த காமிக்ஸ்...
ஆகஸ்டு 2007
வால் பிரதர்ஸ்!

சூரியனும் சந்திரனும்!

வி. ஜெயலட்சுமி

கொரிய நாட்டுக் கதை

வெகு காலத்துக்கு முன்பு ஒரு பெண்மணி தனது மகன் மற்றும் மகளுடன் கிராமம் ஒன்றில் வசித்து வந்தாள். பக்கத்து கிராமத்திலுள்ள ஒரு பணக்காரர் வீட்டில் வேலை செய்யச் சென்றாள். வேலை முடிந்து திரும்பி வரும்போது பணக்காரர் அவளிடம் ஒரு கூடை நிறைய கேக்குகளைக் கொடுத்தார்.

அதை எடுத்துக்கொண்டு காட்டு வழியே வரும்போது, ஒரு புலி அவளைப் பிடித்துக்



கொண்டது. ''கேக்கைக் கொடு, இல்லாவிட்டால் நீயே கேக்காகிப் போவாய்'' என்றது!

பயந்து போன பெண்மணி சில கேக்குகளைத் தந்துவிட்டு வேகமாக நடந்தாள். அதன் ருசி புலிக்குப் பிடித்துவிட, பெண்ணை விரட்டிச் சென்று வழி மறித்து அனைத்து கேக்குகளையும் பறித்துச் சாப்பிட்டது.

காலிப் பெட்டிதான் மிஞ்சியது. வெறுப்புடன் அதைத் தூக்கியெறிந்தாள் அவள். புலி மீண்டும் அவளைப் பின் தொடர்ந்தது.

''உனது பக்கவாட்டில் என்னவோ தொங்குகிறதே அது என்ன?'' என்று கேட்டது.

''அது...அது... அவை எனது கைகள்'' என்று சற்றே பயந்தவாறு சொன்னாள் பெண்மணி.

''கைகளில் ஒன்றைக் கொடு'' என்று அதிகாரத்துடன் கேட்டது புலி.

அவளின் ஒரு கை பறி போயிற்று! தொடர்ந்து மற்றொரு கை, பிறகு வலது கால், அதன் பின் இடது கால் என்று ஒன்றன் பின் ஒன்றாகப் புலிக்குத் தீனியாயின. சற்று நேரத்தில் அவளே பலியாகிப் போனாள்!

புலிக்கு இன்னும் பேராசை விட்டபாடில்லை. பெண்மணியின் உடைகளை அணிந்துக்கொண்டு அவளுடைய வீட்டுக்குப் போனது.

அம்மாவைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த குழந்தைகள் இருவரும் சாப்பிடாமலேயே தூங்கிப் போயிருந்தனர். இதற்குள் வீட்டை வந்தடைந்த பொல்லாத புலி, குரலை மாற்றிக் கொண்டு, கதவைத் தட்டியபடி ''குழந்தைகளா! நான்தான் அம்மா வந்திருக்கேன், கதவைத் திறங்கள்'' என்றது.



"அம்மா இல்லாத பூமியில் நாங்கள் இருக்க விரும்பவில்லை. அதேசமயம் நாங்கள் வாழ்ந்த பூமியை எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்க விரும்புகிறோம்!"

காலையில் வேலைக்குச் செல்லும் முன் புலிகள் நடமாட்டம் பற்றி அம்மா எச்சரித்தது இருவருக்கும் ஞாபகம் வரவே உஷாராயினர். சட்டென எழுந்து, ''அம்மா உன் குரல் ஏன் கரகரவென்று இருக்கிறது?'' என்று கேட்டனர்.

''அதுவா காலையில் எஜமானன் வீட்டில் காக்கைகளை விரட்டி விரட்டி இப்படியாயிற்று'' என்றது புலி.

''அப்படியா அம்மா, அப்படியானால் கதவின் துளை வழியாக உன் கையைக் கொடு. தொட்டுப் பார்த்து நீதான் அம்மா என்று உறுதி செய்து கொள்கிறோம்'' என்று சொன்னான் பையன்.

துளை வழியாகப் புலி முன்னங்கால் ஒன்றினை நீட்டியது. அதைத் தொட்ட குழந்தைகள் இன்னும் உஷாராயினர். இது புலிதான் என்று ஊர்ஜிதம் செய்து, பின் வழியாக ஓடிச்சென்று ஒரு மரத்தில் ஏறிக் கொண்டு ''இறைவா இறைவா'' என வேண்டலாயினர்.

இவர்களின் குரலுக்குச் செவி மடுத்த இறைவன், சுவர்க்கத்திலிருந்து தங்கக் கயிறு ஒன்றினைக் கீழே அனுப்பி, ''இதைப் பிடித்து மேலே வாருங்கள்'' என அன்புடன் பணித்தார்.

அவர்களும் மேலே செல்லத் துவங்கினர். இதற்குள் பின்புறமாக வந்த புலி, அனைத்தையும் நோட்டம் விட்டுக்கொண்டது.

தானும் ''இறைவா இறைவா'' என்று அழைத்தது.

'உனக்கு இதுதான் சரியான பாடம்' என நினைத்த கடவுள், புலிக்கு வைக்கோல் கயிறை அனுப்பி, 'ஏறி வா' என்றார்.

அதைப் பிடித்துக்கொண்டு ஏறிய புலி, பாதி வழியிலேயே கயிறு அறுபட, கீழே விழுந்து உயிரை விட்டது!

இதற்குள் குழந்தைகள் இருவரும் சுவர்க்கம் சென்றடைந்தனர். ''உங்களை மீண்டும் பூமிக்கு பத்திரமாக அனுப்பி வைக்கிறேன்'' என்றார் கடவுள்.

''அம்மா இல்லாத பூமியில் நாங்கள் இருக்க விரும்பவில்லை. அதேசமயம் நாங்கள் வாழ்ந்த பூமியை எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்க விரும்புகிறோம்'' என்றனர் இருவரும்.

இறைவன் பெண்ணைச் சந்திரனாகவும் ஆண் பையனைச் சூரியனாகவும் மாற்றினார். அன்று முதல் தான் சூரியனும் சந்திரனும் பூமிக்கு வெளிச்சம் கொடுத்து வருகின்றனர்.●





ச.கனகசுப்புலட்சுமி,
எட்டாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி,
திருநெல்வேலி

த.சதீஷ்,
பத்தாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
திருச்சி



உங்கள் கைவண்ணம்!




எஸ்.ஸ்ரீராம்நாத்,
முதல் வகுப்பு,
தூய அகஸ்டியன்
பள்ளி,
சென்னை






பி.ஜெயக்குமார்,
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
நம்பியூர்



நா.ஜனார்த்தனம்,
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப்
பள்ளி,
நம்பியூர்



ஆலமரம்!

எங்கள் ஊரின் எல்லையிலே
பெரிய ஆல மரமுண்டு
அதனில் பெரிய கிளைகளுண்டு
விழுதுகள் பலவும் அதிலுண்டு

அந்த மரத்தின் நுனியினிலே
பருந்தின் கூடு இருக்கிறது
மரத்தில் உள்ள பொந்துகளில்
அணிலும் கிளியும் வசிக்கிறது!

மாலைப் பொழுது வந்திட்டால்
பறவைகள் பலவும் வந்திடுமே
கலகல ஒலியும் எழுந்திடுமே
கேட்க இதமாய் இருந்திடுமே

மரத்தை ஒட்டிய பகுதியிலே
ஓணான் பல்லி வசிக்கிறது
மேற்குப் பகுதி கிளையினிலே
தேனியின் கூடு இருக்கிறது!

பள்ளிக் குழந்தைகள் பகலினிலே
விழுதில் ஊஞ்சல் ஆடிடுவர்
மேயச் சென்ற ஆடுகளும்
வெயிலுக்கு நிழலில் நின்றிடுமே!

பேருக்கு மரம் ஒன்றெனினும்
அதனுள் எத்தனை அடைக்கலமே
வாழ்வில் பிறர்க்கு உதவுவதே
இன்பத்தில் இன்பம் அறிவாயே.

- சா.மாதேஸ்வரன்

சீருடை!



சி.விநாயகமூர்த்தி

பள்ளி தோறும் வண்ணம் மாறும்
மாணவர்களின் சீருடை
சிட்டுப் போன்ற சிறுவ ருக்குக்
கட்டுப்பாடே சீருடை

ஏடு பயிலும் மாண வருக்குள்
ஏழை, செல்வர் இருப்பினும்
ஆடை மூலம் சமத்துவத்தை
எடுத்துக் காட்டும் சீருடை!

ஆடை யாவும் தூய்மை யோடு
அணிதல் நல்ல பழக்கமே
மொட்டு விரிந்த தோட்டம் போல
பள்ளிக் கூடம் தோன்றுமே!

ஒன்று போல உடைய ணிந்து
நின்று நடந்து செல்கையில்
என்றும் மாறா உறவு பூத்து
அன்பு கொள்ளச் செய்யுமே!



கு.காளிமுத்து

யாரும் விரும்பி வணங்கிடும்
யானை முகனைப் பாருங்க
பானை போன்ற வயிற்றினார்
பக்தர் போற்றும் பிள்ளையார்!



மழலை கூட்டம் விரும்பிடும்
மாண்பு மிக்க பிள்ளையார்!
அன்னை தந்தை சுற்றியே
உலக மென்ற பிள்ளையார்!

விந்தை உருவ தோற்றமாம்
வீதி தோறும் இருப்பாராம்
அருகம் புல்லை அணியாக
அவரும் விரும்பிச் சூடுவார்.

கல்விச் செல்வம் அருளுவார்
கவலை போக்கும் பிள்ளையார்.

அழகு பிள்ளையார்!





டியர் சில்ட்ரன்!
நான்தான்
ஆசுரா மாமா
இனி மாதா மாதம்
உங்களைச் சந்திச்சு
எனக்குத் தெரிஞ்ச...







ஆஹா ஆல்ப்ஸ்!

-முனைவர் ஆசுரா

...நான் படிச்ச விஷயங்களை உங்களோடு பகிர்ந்துக்கப் போறேன்.



ஐரோப்பாவில் இருக்கிற ஆல்ப்ஸ் மலைத் தொடருக்கு போகப் போறோம், சாரி ஏறப் போறோம்!

ஆல்ப்ஸ் மலைத் தொடரின் கிழக்கில் ஆஸ்திரியா, ஸ்லோவேனியா இருக்கு. அதேபோல இத்தாலி, சுவிட்சர்லாந்து, லிசெட்டன்ஸ்டென் மற்றும் ஜெர்மனி முதல் பிரான்ஸ் வரை மேற்கில் இருக்கு.

கிழக்கு ஆல்ப்ஸ் பகுதிகள், அவற்றிலுள்ள பாறைகளின் தன்மை அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் மத்திய கிழக்கு ஆல்ப்ஸ் ரொம்ப ரொம்ப ஹைட்டா இருக்குங்க. எவ்வளவுன்னு கேட்குறீங்களா? 13,290 அடி. இது ஆஸ்திரியா, சுவிட்சர்லாந்து நாடுகளில் இருக்கு. மேற்கு ஆல்ப்ஸ்'ல மொத்தம் குட்டி, குட்டியா பத்து ஆல்ப்ஸ் இருக்கு. அவற்றோட பெயர்கள் : லிகுரியன், மாரிடைம், காட்டியன், டாபைன், கிராரியன், பெனினைன், பெர்னீஸ், லெபோன்டைன், கிளாரஸ், வட கிழக்கு சுவிஸ் ஆல்ப்ஸ்... சொல்லும்போதே, மலை ஏறுற மாதிரி மூச்சு வாங்குது இல்லே?

ஆல்ப்ஸ்'ல இருக்கிற மிக உயரமான மலை 'மவுண்ட் பிளாங்க்'. இதோட உயரம் 15,774 அடி. இது பிரான்ஸ் மற்றும் இத்தாலிய எல்லையில் இருக்கு.

இப்ப நாம ஆல்ப்ஸ்ல இருக்கிற ப்ளோரா பத்தி தெரிஞ்சுக்கலாமா...? ''ப்ளோரா யார்? எந்த கிளாஸ்ல படிக்கிறா?''ன்னு கேட்டுடாதீங்க. ப்ளோரான்னா தாவரங்கள். ஓக், பீச் (beach) சிகாமோர், மேபிள் போன்ற மரங்கள் எல்லாம் இங்கே வளருது.

ஆல்ப்ஸ் மலைத் தொடரில் 13,125 அடிகளுக்கு மேலே பூச்செடிகள் இருக்குன்னா பார்த்துக்கங்க. 'கிளேஸியர் பட்டர் கப், அல்பைன் ராக், ஜாஸ்மின் மற்றும் சாக்ஸி பிராகா பை புளோரா இப்படி நிறைய பூக்கள்!

ஆல்ப்ஸ் மலையில் இருக்கிற பூச்சிகள், பறவைகள் என்னென்ன? தெரிஞ்சுக்க ஆர்வமா? அதோ பறந்து வருது பாருங்க, 'அல்பைன் அப்போலோ' வண்ணத்துப்பூச்சி. இங்கே பாருங்க ஊ..... ஊ.... 'அல்பைன் சலாமாண்டர்' ரொம்ப க்யூட்டா பார்க்குது பாருங்க. ஆல்பைன்



ஆக்சன்டர் அங்கே பாருங்கப்பா, கண்ணை முழிக்குது ஆந்தை! அப்புறம் புறா, கழுகு... அதோ 'அல்பைன் ஐபெக்ஸ்!' எவ்வளவோ பெரிய கொம்பு. அதோ அது தான் அல்பைன் மர்மோத் (கரடி). ஓ.கே எல்லாம் பார்த்தாச்சா? வாங்க கிளம்பலாம்.

அது சரி 'ஆல்ப்ஸ்'ன்னா என்ன அர்த்தம்? இலத்தீன் மொழியில் 'அல்பஸ்' அப்படின்னா வெள்ளைன்னு ஒரு அர்த்தம் இருக்குங்க. அடுத்த மாசம் வேற ஒரு சுவையான விஷயத்தோடு உங்களைச் சந்திக்கறேன். குட் பை!





பிரியதர்ஷினி பெற்ற ஞானயோகம்!


கோவை இராமசாமி பள்ளியில் ஆறாம் வகுப்பு படிப்பவர் பிரியதர்ஷினி. நன்னெறிக் கழகத்தின் பொன் விழா ஆண்டில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பங்கேற்று முதல் பரிசைப் பெற்றுள்ளார். சான்றிதழுடன் விவேகானந்தரின் 'ஞானயோகம்' என்ற புத்தகமும் அளிக்கப்பட்டதைப் பெருமையாகப் போற்றி வருகிறார்.

(நல்ல நல்ல புத்தகங்களைத் தொடர்ந்து படிங்க!)





விக்னேஷின் ஓசோன் ஓவியம்!



புதுச்சேரி புளூ ஸ்டார் ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிப்பவர் விக்னேஷ். கோகுலத்தில் பல்வேறு படைப்புகள் வெளியாகியுள்ளன. உலக ஓசோன் நாளை முன்னிட்டு புதுச்சேரியில் நடந்த சுற்றுச் சூழல் விழிப்புணர்வு ஓவியப் போட்டியில் வென்று பரிசைப் பெற்றுள்ளார்.

(சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதே மிகப் பெரிய பரிசுதான்!)





பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது. விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்து கொண்டு பரிசு பெற்றிருந்தால் அதுகுறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும். மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்.



அனுப்ப வேண்டிய முகவரி :
கோகுலம், சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.



சுப்ரியாவின் அரை சதம்!

சென்னை ராயப்பேட்டை ஆதர்ஷ் வித்யாலயாவில் ஏழாம் வகுப்பு படிப்பவர் சுப்ரியா. பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டியென பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு ஐம்பதுக்கும் மேற்பட்ட சான்றிதழ்களைப் பெற்றுள்ளார். சமீபத்தில் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் இதழ் நடத்திய மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் பங்கேற்று சான்றிதழ் பெற்றுள்ளார்.





(சீக்கிரம் சதம் அடிங்க சுப்ரியா!)

சர்வரோக

● தி.சே.அறிவழகன், திருப்புலிவனம்

? 'பேஸ்மேக்கர் கருவி' என்றால் என்ன? இது எதற்குப் பயன்படுகிறது?

! இதயத்தில் இயற்கையாக உண்டாகின்ற மின் தூண்டல்கள் மூலம் தான் இதயம் துடிக்கிறது என்பதை அறிவியல் பாடத்தில் படித்திருப்பீர்கள், இல்லையா? இதயம் நிமிடத்துக்கு 60 முதல் 90 முறை வரை துடித்தால் அது 'இயல்பளவு' என்கிறோம். இந்த எண்ணிக்கை 60-க்கும் கீழ் குறைந்தால் அதைக் 'குறைத் துடிப்பு' என்கிறோம். இது உடல் நலனைப் பாதிக்கும்; உயிருக்கே ஆபத்து வரலாம். இதைச் சரி செய்ய 'பேஸ்மேக்கர் கருவி' பயன்படுகிறது. இது செயற்கையாக மின் தூண்டல்களை ஏற்படுத்தும் ஒரு கருவி. தீப்பெட்டி அளவில் இருக்கும். பேட்டரியில் இயங்கும். இதனை நோயாளியின் மார்பில் பதித்து விடுவார்கள். ஒரு மின் இணைப்புக் கம்பி மூலம் இதயத்துடன் இணைத்து விடுவார்கள். இது ஒரு கடிகாரம் போல் இயங்குகிறது. இதயம் எத்தனைமுறை துடிக்க வேண்டும் என்று ஏற்கெனவே இதில் முறைப்படுத்தப்பட்டிருக்கும். அந்த எண்ணிக்கையில் மின் தூண்டல்கள் இதிலிருந்து கிளம்பி இதயத்தை இயங்க வைக்கும்.





* 'பேஸ்மேக்கர்' மார்பில் பொருத்தப்பட்டுள்ள நிலை

● வி.வேல்முருகன், முத்தம்பட்டிகேட்

? மலைப்பகுதிகளில் பயணம் செய்யும்போது வாந்தி வருவது ஏன்? இதனைத் தடுப்பது எப்படி?


! நம் உடலைச் சமநிலைப்படுத்துவது காதில் உள்ள 'வெஸ்டிபுலர்' குழாய் அமைப்பு. அதில் உள்ள ஒரு திரவம் நம் உடல் அசைவுகளுக்கேற்ப சரியான அளவில் அசைந்து நாம் நடக்கவோ, நிற்கவோ, ஓடவோ, புரளவோ உதவுகிறது. வளைவான மலைப்பகுதிகளில் பயணம் செய்யும்போது வண்டியின் அசைவுகள் திடீர் திடீரென மாறுபடும். அப்போது நம் உடலும் நீளவாட்டத்திலோ, குறுக்குவாட்டத்திலோ, செங்குத்தாகவோ அசைகிறது. ஆனால் இந்த அசைவுகளுக்கு ஏற்ப காது திரவம் சட், சட்டென்று அசைந்து கொடுக்கச் சிரமப்படுகிறது. அப்போது மூளையில் உள்ள வாந்தி நரம்புகள் தூண்டப்படுவதால் நமக்கு வாந்தி வருகிறது. இந்த வாந்தியை நிறுத்த மாத்திரைகள் உள்ளன. மருத்துவரின் ஆலோசனைப்படி பயணம் துவங்குவற்கு அரைமணி நேரம் முன்பு சாப்பிட்



டுக்கொண்டால் வாந்தி வராது.

● ம.தனசேகரன், குமுளி


? ஆஸ்பிரின் மருந்தை



நிவாரணி!

சர்வரோக நிவாரணி என்கிறார்களே, எப்படி?

! 'அசிட்டைல் சாலிசிலிக் அமிலம்' எனும் வேதிப் பொருள் தான் 'ஆஸ்பிரின்' என்று அழைக்கப்படுகிறது. இது ஆரம்பத்தில் காய்ச்சல், தலைவலி, உடல்வலி, பல்வலி, மூட்டுவலி போன்றவற்றுக்குத் தரப்படும் சாதாரண வலி நிவாரணியாகத்தான் இருந்தது. பின்பு இந்த மருந்தே இதயம், மூளை போன்ற முக்கிய உறுப்புகளுக்கு ரத்தம் செல்லும்போது, ரத்தம் அங்கு உறையாமல் பார்த்துக் கொள்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் மாரடைப்பு, பக்கவாதம் வருவதை ஆஸ்பிரின் தடுப்பது உறுதியாயிற்று. ஆகவே ஆஸ்பிரினை சர்வரோக நிவாரணி என்கிறார்கள்.



● இரா.பவானி, சென்னை - 9

? தலையணைகளை உயரமாக வைத்துப் படுத்துக் கொள்ளலாமா?

! கழுத்தில் பிரச்னை உள்ளவர்கள் தலையணையே இல்லாமல் சம தரையில் படுப்பதுதான் நல்லது. ஆஸ்துமா மற்றும் மூச்சிரைப்பு நோய் உள்ளவர்கள் மூன்று தலையணைகள் வைத்து உயரமான நிலையில் படுப்பது பயன் தரும். மற்றவர்கள் ஒரு சிறிய தலையணையை வைத்துக்கொண்டால் போதும்.

டாக்டர் கு. கணேசன்

பிரவீன்

வணக்கம்! கடந்த மாதம் சிறுவர் சங்கம் குறித்த தகவலும் கூப்பனும் வெளியானது உங்களை மகிழ்ச்சிக் கடலில் மூழ்க வைத்திருக்கும். உங்களிடமிருந்து கூப்பன்கள் ஆர்வத்துடன் வரத்தொடங்கியுள்ளன. இந்த மாதமும் கூப்பனை வெளியிட்டுள்ளோம். ஏற்கனவே கூப்பனை அனுப்பி விட்டவர்கள் உங்கள் நண்பருக்கோ உறவினருக்கோ கொடுக்கலாம். அவர்களை 'கோகுலம் சிறுவர் சங்கம்' உறுப்பினராக ஏற்கத் தயாராக உள்ளோம்.

தொடருது கோலாகலம்!



கடந்த மாத இதழைப் பார்க்கத் தவறியவர்களுக்காக உறுப்பினராவது எப்படி என்கிற விவரத்தை இங்கே மீண்டும் அளிக்கிறோம்.

யார் சேரலாம்?

தமிழ் எழுத, படிக்கத் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும் அவர்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தில் சேரலாம். பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும். (பள்ளி இறுதி வகுப்பு வரை)

எப்படி அனுப்புவது?

இங்கு கொடுக்கப்பட்டுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்ப வேண்டும். நாங்கள் உங்களுக்கு 'கோகூ' உருவம் பொறிக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அட்டையை அனுப்புவோம். அதில் உங்களைப் பற்றிய விவரங்களுடன், உங்களுக்கான உறுப்பினர் எண்ணும் கொடுக்கப்பட்டிருக்கும்.

பிறகு நீங்கள் கோகுலத்துக்கு அனுப்புகிற எந்த படைப்பாக இருந்தாலும் பெயருடன் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிடுங்கள்.

கொண்டாட்டம்!

உறுப்பினர்கள் இன்ப அதிர்ச்சிகளை அவ்வப்போது எதிர்பார்க்



கலாம். திடீர் பரிசுப் போட்டிகள் வைப்போம். வெற்றி பெறுவோரின் புகைப்படங்களை கோகுலத்தில் வெளியிட்டு சிறப்புச் செய்வோம். எங்கள் ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்கள் உங்கள் ஊருக்கு வந்தால், உங்களைச் சந்திப்பார்கள். அவர்களுடன் உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.

அது மட்டுமா? அவ்வபோது கோகுலம் சார்பாக விழா நடத்தும் எண்ணமும்கூட இருக்கிறது. அப்போது உங்களுக்காகப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படலாம். மொத்தத்தில் 'கோகுலம் சிறுவர் சங்கம்' உங்களுக்குப் பல புதிய அனுபவங்களை அளிக்கப் போகிறது.

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினராகுங்கள்;

கொண்டாட்டங்களுக்குத் தயாராக இருங்கள்!

குறிப்பு : இந்தக் கூப்பன் வரும் மாதங்களிலும் வெளியாகும். கூப்பனை நகல் எடுத்து பூர்த்தி செய்யக்கூடாது. அசல் கூப்பன் மட்டுமே ஏற்கப்படும்.

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் 'கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

(கையொப்பம்)

நினைப்பும் செலவும்!





''டாக்டர் ராதா கிருஷ்ணன் முன்னாள் ஆசிரியராக இருந்தவர். அதனாலே அவரோட பிறந்த தினத்தை ஆசிரியர் தினமாகக் கொண்டாடறோம்.''

''அப்போ நேரு மாமா முன்னாள் குழந்தையாக இருந்ததாலே குழந்தைகள் தினம் கொண்டாடறோமா?''

- ஆர்.ஆர்.பூபதி,
திண்டுக்கல்



''ஆஸ்திரேலியா போகலாம்னு நெனைக்கிறேன், எவ்வளவுடா செலவாகும்?''

''நெனைக்கிறதுக்கெல்லாம் ஒண்ணும் செலவாகாதுடா!''

- ஜி.சுசீல்,
இராஜபாளையம்

''எதுக்குடா குளிக்கும் போது முதல் செம்புத் தண்ணீரைக் கீழே ஊத்துற?''

''முதல் செம்பை ஊத்தும்போதுதான் ரொம்ப குளிரும்னு அம்மா சொன்னாங்க. அதனால்தான் அதைக் கீழே ஊத்திட்டேன்.''

- மா.கண்ணன்,
திருச்சி



''உங்கள்லே யார் முதல்லே சண்டை போட்டது?''

''பாலுதான் சார்! அவன்தான் சார் என்னை முதல்லே திருப்பி அடிச்சான்.''

- ஆர்.ஆர்.பூபதி,
திண்டுக்கல்







தீம் பார்க் போகலாமா?

ஹலோ நண்பர்களே! நீங்கள் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்த 'போஸ்டர்' போட்டி முடிவை இதோ அறிவிக்கிறோம். கடந்த அக்டோபர் மாதம் தொடங்கி மார்ச் வரை ஆறு மாதங்களாக இந்தப் போட்டி நடத்தப்பட்டது.

இது பெரிய போட்டி என்பதால் பரிசீலனை செய்வதில் அவகாசம் தேவைப் பட்டது. ஆகவேதான் முடிவை வெளியிட மூன்று மாதம் எடுத்துக் கொண்டோம். விதிமுறைகளின்படி அதிக நண்பர்களை அறிமுகம் செய்து, கூப்பன்களையும் சரியாகப் பூர்த்தி செய்து அனுப்பியவர்களில் பத்து பேரை ஆசிரியர் குழு தேர்வு செய்தது. இவர்கள்தான் **'தீம் பார்க்'** செல்லப் போகும் சுட்டிகள். தீம் பார்க் செல்வது எப்போது? விதிமுறைகள் என்ன? என்கிற விவரங்களுடன் இவர்களுக்குத் தனித்தனியாக கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. தவிர, ஆறுதல் பரிசுக்கும் இருபது பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்குப் பரிசாக கோகுலம் ஆறு மாத சந்தா வழங்கப்பட்டு, ஆறு மாதங்களுக்கு கோகுலம் அனுப்பி வைக்கப் படும். அவர்களின் பெயர் பட்டியல் அடுத்த இதழில் வெளியாகும்.

'தீம் பார்க்' செல்லும் நண்பர்கள் :

- பி.ஜெயக்குமார், ஒன்பதாம் வகுப்பு, நம்பியூர்
- கே.கவிதா, ஆறாம் வகுப்பு, ஆற்காடு
- கா.கணேசன், ஏழாம் வகுப்பு, நீர்விளங்குளம்
- கே.காயத்ரி, ஆறாம் வகுப்பு, ராணிப்பேட்டை
- பா.கைலாஷ், ஏழாம் வகுப்பு, கும்பகோணம்
- ஏ.சாந்தி, ஒன்பதாம் வகுப்பு, தூத்துக்குடி
- த.மௌரியா, ஏழாம் வகுப்பு, கோவை
- எஸ்.கே.அபிஷேக், ஐந்தாம் வகுப்பு, நெய்வேலி
- ச.கனகசுப்புலெட்சுமி, எட்டாம் வகுப்பு, திருநெல்வேலி
- ஆர்.கஸ்லச்செல்வி, எட்டாம் வகுப்பு, சென்னை

போஸ்டர் போட்டி முடிவு

தெரிந்துகொள்வோம்

மருத்துவர்கள் தினம்!



• பி.சி.ராய்

ஜூலை 1 - உலக மக்கள் தொகை நாள்

உலகில் நொடிக்கு நொடி மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே போவது அனைவரும் அறிந்த செய்திதான். நிபுணர்கள் தரும் புள்ளி விவரப்படி, ஐந்து நிமிடங்களுக்கு இருபத்தைந்து பேர் என்ற கணக்கில் மக்கள் தொகை அதிகரிக்கிறது. இதனால் பலவிதமான பிரச்னைகளை சந்திக்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில், மக்கள் தொகை கட்டுப்பாடின்றி அதிகரிக்கும் போது, அந்நாட்டு மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், சுகாதார வசதிகளும் அளிக்க அரசாங்கம் திணறுகிறது. எனவே, மக்கள் தொகையைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வர வேண்டியது அவசியம் என்று ஐ.நா. சபை போன்ற உலகளாவிய அமைப்புகளும், உலக நாடுகளும் சிந்தித்து நடவடிக்கைகள் எடுத்து வரு கின்றன. அதன் பலனாக, 1950-ல் ஆண்டுக்குச் சுமார் ஆறு சதவிகிதம் என்கிற அளவில் பெருகிய உலக மக்கள் தொகை, படிப்படியாகச் சரிந்து தற்போது சுமார் மூன்று சதவிகிதமாகி இருக்கிறது.

ஜூலை 1 - மருத்துவர்கள் தினம்

அமெரிக்காவில் ஆண்டுதோறும் மார்ச் மாதம் 30ஆம் தேதி மருத்துவர்கள் தினமாகக் கொண்டாடப்படு கிறது. 1842ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் தேதி டாக்டர் 'கிரா.ஃபோர்ட் லாங்' என்பவர் மயக்க மருந்து கொடுத்து ஒரு நோயாளியின் மூளையில் இருந்த கட்டியை வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்து அகற்றினார். அதைக் குறிப்பிடும் வகையில் மார்ச் 30ஆம் தேதி மருத்துவர்கள் தினமாக அவர்கள் கொண்டாடினாலும், இந்தியாவில் ஜூலை மாதம் முதல் தேதிதான் மருத்துவர்கள் தினமாகக் கொண்டாடப்



■ எஸ். சந்திரமௌலி



படுகிறது. இதற்கு என்ன பின்னணி என்று தெரிந்துகொள்ள ஆசையாக இருக்கிறதா?

பீகார் மாநிலம் பாட்னாவில் பிறந்தவர் டாக்டர் பி.சி.ராய். அவர் ஏழை மக்களுக்குச் செய்த மருத்துவத் தொண்டு அபாரமானது. அதுமட்டுமின்றி ராய் ஒரு சுதந்திரப் போராட்ட வீரர். காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும் இருந்திருக்கிறார். அவர் ஒரு சிறந்த கல்வியாளரும் கூட. மேற்கு வங்க மாநிலத்தின் முதல்வராகப் பதவி வகித்தவர். அவரது பிறந்த நாள் ஜூலை 1, 1882. அவர் மறைந்த தினம் ஜூலை 1, 1962. அவரது சிறப்பைப் போற்றும் விதமாக இந்திய மருத்துவ கவுன்சில், ஜூலை மாதம் முதல் தேதியை மருத்துவர்கள் தினமாகக் கொண்டாடி வருகிறது.

நான்காவது ஞாயிற்றுக் கிழமை - பெற்றோர்கள் தினம்

1994ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை மாதம், நான்காவது ஞாயிற்றுக் கிழமை பெற்றோர்கள் தினமாக அமெரிக்காவில் கொண்டாடப்படுகிறது. குழந்தைகளைப் பெற்றெடுத்து, வளர்த்து ஆளாக்குவதில் பெற்றோர்களின் பங்கு முக்கியமானது. எனவே அவர்களின் தியாகத்தையும், உழைப்பையும், அன்பையும் நினைவு கூரவும் தங்களுடைய பெற்றோர்களை மகிழ்விக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் அமெரிக்க அதிபராக இருந்த பில் கிளின்டன் செய்த அறிவிப்பின் பலன்தான் பெற்றோர்கள் தினம்!

அம்மாடியோவ்!
ஐந்து நிமிஷத்துக்கு இருபத்தைந்து பேர் பிறக்கறாங்களாம்!





✱ இந்தியாவில் மட்டுமின்றி உலகமெங்கும் உள்ள மாணவர்களையும், இளைஞர்களையும் தனது எழுச்சியான கருத்துகளால் கவர்ந்த சுவாமி விவேகானந்தர் நினைவு நாள் - ஜூலை 4

✱ படிக்காத மேதை காமராஜர் பிறந்த நாள் - ஜூலை 15.

எட்டாம் வகுப்பு 'சி' பிரிவில் வகுப்பாசிரியர் மாதவன் வந்ததும் மாணவர்கள் அனைவரும் எழுந்து நின்று வணக்கம் சொன்னார்கள். அவர்களை உட்காரச் சொல்லி விட்டு வகுப்பை ஒரு முறை நிதானமாகப் பார்த்தார் மாதவன்.

மாணவர்கள் அனைவருக்கும் மாதவன் சாரைப் பிடிக்கும். எப்போதும் சிரித்த முகம். தவறு செய்யும் மாணவர்களைத் திருத்த நினைப்பாரே தவிர, தானாகவோ, தலைமை ஆசிரியரிடம் சொல்லியோ தண்டனை தர மாட்டார். எனவே அவரது பாடவேளையில் மாணவர்கள் அமைதியாக இருப்பதுடன் நன்றாக கவனிக்கவும் செய்வார்கள்.

பாடங்களை உதாரணங்களுடன் அழகாகச் சொல்லி மாணவர்கள் மனத்தில் பதிய வைத்து விடுவதால், அவர் நடத்தும் பாடங்களில் எல்லா மாணவர்களும் வெற்றி பெறுவதுடன் அதிக மதிப்பெண்கள் வாங்குவார்கள்.

நீதி போதனை வகுப்பில் வெறுமனே கதைகள் மட்டும் சொல்லாமல், சின்னச் சின்ன விளையாட்டுக்கள் மூலம் நல்ல எண்ணங்களை மாணவர்கள் மனத்தில் விதைப்பதால் இன்று என்ன நடத்தப் போகிறார் என்ற ஆர்வம் ஒவ்வொரு நாளும் மாணவர்களிடம் இருக்கும்.

"மாணவர்களே! ஆளுக்கு ஒரு சின்னத் தாளை எடுத்துக் கொள்ளுங்கள்." அதில் இந்த வகுப்பில் உள்ள தோழன் ஒருவன் பெயரை எழுதி, அவன் செய்ய வேண்டிய





செயல் ஒன்றையும் எழுதுங்கள். நான் ஒவ்வொரு தாளாக எடுத்து அதிலுள்ள பெயரை வாசிப்பேன். அந்த மாணவன் முன்னால் வந்து, தாளில் அவன் தோழன் எழுதியுள்ள செயலை எல்லோர் முன்பும் செய்ய வேண்டும்'' என்றார்.

மாணவர்களுக்கு ஒரே கொண்டாட்டம்! வகுப்பில் தனக்குப் பிடிக்காத பையன் களைப் பழி வாங்க அருமையான சந்தர்ப் பம் கிடைத்தது என்று மகிழ்ந்தார்கள். உடனடியாக ஒரு தாளை எடுத்து பக்கத்தில் உள்ளவன் பார்க்காதபடி கையால் மறைத் துக் கொண்டு எழுதினார்கள்.

நம்மைப் போல...



எல்லோரும் எழுதி முடித்ததும், வழக்கம் போல வகுப்புத் தலை வன் ஸ்ரீராம் தாள்களைச் சேகரித்து ஆசிரியர் மேசை மேல் வைத்தான். வகுப்பில் மாணவர்கள் உயர அடிப்படையில் உட்கார்ந்திருந்ததால் முதலில் கண்ணனின் தாள் இருந்தது.

கண்ணனுக்கு கொஞ்ச நாளாக முரளி மீது கோபம். ஒரு நாள் வீட்டுப் பாடம் எழுதா மல் பள்ளிக்கு வந்துவிட் டான் கண்ணன். யாரை யாவது பார்த்து எழுதி வைத்து விடலாம் என நினைத்து, முரளியை நோட்டு கேட்டதற்கு அவன் தர மறுத்துவிட்டான். அவனோடு போராடிக் கொண்டிருக்கும் போதே ஆசிரியர் வந்துவிட, வீட்டுப் பாடம் எழுதாமல் பள்ளிக்கு வந்ததற் காக கண்டித்தார். எனவே முரளி கழுதை போல கனைக்க வேண்டும்' என்று எழுதியிருந்தான் கண்ணன்.

முரளி எல்லோர் முன்பும் வந்து நின்று கழுதைக் குரலில் கனைப்பது போலவும் மாணவர்கள் அனைவரும் அவனைப் பார்த்து விழுந்து விழுந்து சிரிப்பது போலவும், அதிலிருந்து அவனுக்கு கழுதை என்ற பட்டப் பெயர் உண் டாவதாகவும் கற்பனை செய்தான்.

முரளியின் பெயரை ஆசிரியர் அழைக் கும் நேரத்திற்காக காத்திருந்தான் கண் ணன். அநேகமாக நிறைய மாணவர்கள் தங்கள் தோழர்கள் அவமானப்படப்போவ தைக் காண ஆவலாக இருந்தார்கள்.

தாள்களைக் கையில் எடுத்தார் ஆசிரி யர். எதிர்பார்ப்பின் உச்சத்தில் மாணவர்கள் இருக்கையின் நுனிக்கே வந்துவிட்டார்கள்.

சக்கரத்தாழ்வார்



''உங்களுக்குப் பிடித்த செயலை எழுதி. நீங்களே நடித்துக் காட்டுங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக உங்கள் நண்பர்கள் நடித்துக் காட்ட வேண்டும் என்ற சொல்லி விட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள். நீங்களே வரிசையாக வந்து உங்கள் தாளில் நீங்கள் எழுதியுள்ளதைச் செய்து காட்டுங்கள்'' என்றார்.

அவ்வளவுதான்! மாணவர்களின் உற்சாகம் முழுவதும் வடிந்து விட்டது. பயம் வந்து விட்டது. 'இதென்னடா கூத்து' என நினைத்தார்கள்.

''சார்... சார்... ப்ளீஸ் சார்... வேண்டாம் சார்....'' என்று குரல் கொடுத்தான் கண்ணன்.

''ஏன்?'' என்று கேட்டார்.

''அ...அது... வந்து...'' என்றவனால் பேச முடியவில்லை. மேலும் பல மாணவர்களும் திருடனுக்குத் தேள் கொட்டியதைப் போல் இருந்தார்கள்.

''உங்கள் தோழர்கள் செய்ய வேண்டும் என்று நீங்கள் எழுதியிருப்பதைத்தானே நீங்கள் செய்யப் போகிறீர்கள். ஏன் பயப்படுகிறீர்கள்? உங்கள் தோழர்களுக்கு நீங்கள் என்ன கெட்டதையா எழுதியிருப்பீர்கள்?'' என்று கேட்டார்.

மாணவர்கள் அனைவரும் தங்கள் தவறை நினைத்து வெட்கித் தலை குனிந்தனர். மாணவர்களின் மனநிலையை ஆசிரியர் அறிய மாட்டாரா என்ன?

''மாணவர்களே ஒரு விஷயத்தைப் புரிந்துக் கொள்ளுங்கள். நீங்கள் மற்றவர்களிடம் என்னவெல்லாம் எதிர்பார்க்கிறீர்களோ அதுபோலத்தான் மற்றவர்களும் உங்களிடம் எதிர்பார்ப்பார்கள். மற்றவர்களிடமிருந்து நட்பையும் அன்பையும் நீங்கள் பெற நினைத்தால், அவற்றை முதலில் நீங்கள் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். நாம் வேறு அவன் வேறு என்று நினைக்காமல் நேசிக்க வேண்டும். இப்போது இந்தத் தாள்கள் அனைத்தையும் கிழித்து விடுகிறேன். மீண்டும் புதிதாக எழுதுங்கள். உங்கள் நண்பர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை எழுதுங்கள்'' என்றார்.

இப்போது மாணவர்களின் முகங்களில் மலர்ச்சி. ஒருவரை ஒருவர் தோழமை உணர்வுடன் பார்த்துவிட்டு தாள்களில் எழுத ஆரம்பித்தனர். ●



வெயிட் போடணும்!

''தம்பி நீ ரொம்ப ஒல்லியா இருக்கே வெயிட் போடணும்னு சொன்னேன். அதுக்கு ஏன் கத்தறே?''

''நீங்க பேப்பர் வெயிட்டை என் கால்ல போட்டுடீங்க டாக்டர்.''

- ஜீ.கசீல்,
இராஜபாளையம்

சூப்பர் கையெழுத்து!

பெரியோர்களின் உபதேசமொழிகள்

1. கடவுளிடம் தளராத நம்பிக்கை.
2. பேச்சில் தன்னடக்கம்.
3. ஏழ்மையிலும் நேர்மை.
4. கோபத்திலும் பொறுமை.
5. துன்பத்திலும் தைரியம்.



சி.நித்ய கல்யாணி, 5-ஆம் வகுப்பு, ஆக்ஸ்போ மெட்ரிக் பள்ளி, திருநெல்வேலி

திருக்குறள்



1) செய்யாமல் செய்தஉதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது.

2) காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது.

3) பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின் நன்மை கடலின் பெரிது.


ர.ஜகதீஷ், 5-ஆம் வகுப்பு, பரம்வீர் மேல்நிலைப் பள்ளி, தருமபுரி.

சொல் சொல்லும் சொல்

முயற்சி: நீ என்னை கடைபிடித்தால் நான் உன்னை உயர்த்துவேன்.

சோம்பல்: நான் உன்னில் இருந்தால் இன்பமாக இருக்கும். ஆனால் நான் உன்னை அணு அணுவாக அழித்துக் கொண்டே வருவேன்.

பணிவு: பெருமை தானே உன்னைத்தேடி வந்து சேர விரும்பினால் என்னைக் கைக்கொள்.



கு.ரம்யா, 3-ஆம் வகுப்பு, ஸ்ரீமதி சுந்தரவல்லி நினைவுப் பள்ளி, சென்னை

வீரபுரி விசித்திரன்!


வீரபுரியின் அரசன் வீரேந்திரன். பெயரில்தான் வீரம்...
இந்திரபுரி மன்னன் போர் ஓலை அனுப்பி யுள்ளான்.
என்ன?
மந்திரி, என்ன செய்வது?
இது பெரிய பிரச்னை மன்னா! யோசிக்கணும்
ஆலோசனை நடந்தது. முடிவில்...
என்ன முடிவு எடுத்தீர்கள்.
ஒரே ஒரு வழிதான் அரசே...
எல் லோரும் இங்கிருந்து ஓடி தலைமறை வாகி விடு வோம்
ஏற்பாடு நடக் கட்டும்.
அப்போது-
அரசே, இது மடத்தனம். நம் நாட்டை விட்டு நாம் ஏன் ஓட வேண்டும்?
யார் நீ?


அவன் பெயர் விசித்திரன். கட்டை விரல் அளவே உருவம்.
பொறுப்பை என்னிடம் விடுங்கள்... நான் உதவுகிறேன்.
நீயா? நல்ல தமாஷ்!
குள்ளப் பயலே! ஆபத்தான நேரத்தில் தமாஷ் செய்யாதே!
இனி பேச மாட்டேன். செயலை முடித்து விட்டு வருகிறேன்.
போ! போ!
விசித்திரன் இந்திரபுரிக்குச் சென்றான்.
இவர்களின் போர் ரகசியத்தை அறிய வேண்டும்.
ஹா... ஹா... இந்த விசித்திரன் நுழைய ஒரு ஜன்னல் போதும்.
இந்திரபுரி மன்னன் தனது ஆலோசகர்களுடன் போர் குறித்து திட்டம் தீட்டிக் கொண்டிருந்தான்.
நான் வந்தது சரியான நேரம்தான்.



மீண்டும் வீராபுரிக்கு வந்தான்.
அரசே, ரகசியங்களுடன் வந்திருக்கிறேன்.
மறுபடியும் நீயா?
சொல்வதைக் கேளுங்கள். அவர்களின் குதிரைகள் எல்லாம் நோயால் படுத்துவிட்டனவாம். ஆகவே காலாட் படை மட்டும் வரப் போகிறது.
ஓ!
சுரங்கம் மூலம் வருவதாக திட்டம் போட்டுள்ளார்கள்.
நீண்ட தூரம் நடந்து வந்து களைத்து விடுவார்கள்...
நாம் சுரங்க வாசலுக்குச் சென்று அவர்கள் வந்ததுமே தாக்குதல் நடத்தினால் வென்று விடலாம்.
தளபதி, படை புறப்படட்டும்.
© JINGLE BELL CREATIONS
விசித்திரனின் யோசனை வென்றது. எல்லோருக்கும் மகிழ்ச்சி.
வெற்றி! வெற்றி!
பிறகு...
விசித்திரா, உன்னைக் கேலி செய்ததற்கு மன்னித்து விடு. இனி நீதான் எங்களின் ஆலோசகர்!

போட்டி

பரிசு ரூபாய் 1000/-

விடையைச் சொல்; பரிசை வெல்!





இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி. முடிவு தேதி 15.7.2007

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர், கோகுலம்,
(பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

கேள்விகள் :

1. அப்துல் கலாமின் முழுப் பெயர் என்ன?____________________
2. கோகுலம் சிறுவர் சங்கத்தின் முதல் உறுப்பினர் யார்?____________________
3. வானவில்லிடம் வண்ணம் கேட்ட பூச்சி எது?____________________
4. பெற்றோர்கள் தினத்தை அறிவித்தவர் யார்?____________________
5. கண்ணன், தனது வகுப்புத் தோழன் முரளி என்ன செய்ய வேண்டுமென நினைத்தான்?____________________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

கடந்த இதழில் கேட்கப்பட்ட கேள்விகளும் உங்கள் பதில்களும்...

1. மார்ட்டின் லூதர் கிங் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

அமெரிக்கா. நிறவெறியை எதிர்த்துப் போராடி நீக்ரோ இனத்தலைவராக விளங்கியவர். 'கறுப்பு காந்தி' என்று சொல்லப்படுபவர்.

- கே.காயத்ரி, ராணிப்பேட்டை

2. பிறந்த குழந்தை அழுகிறது, சிரிக்கிறது... ஆனால் பேசுவதில்லையே ஏன்?


பேச்சுத் திறனுக்கு மனிதனின் சிக்கலான அமைப்புடைய மூளை, பெரிய தொண்டைப் பகுதி காரணமாகும். மனிதனுக்குத் தொண்டைப் பகுதி, மூக்கின் உட்குழிவுப் பகுதிக்கும், குரல் வளைக்கும் இடையே அமைந்துள்ளது. குழந்தைகளுக்குக் குரல்வளை ஆரம்பத்தில் கழுத்துக்கு மிகவும் மேலே இருக்கும். ஒன்றரை அல்லது இரண்டு ஆண்டுகளில் அது கழுத்துப் பகுதியின் கீழிறங்கி விடுவதால், தொண்டைப் பகுதி விரிந்து பெரிதாகும். அப்போது மழலையில் பேசத் தொடங்கும். மூளை வளர்ச்சியடையத் தொடங்கியதும் நன்றாகப் பேசும்.

- டி.தாமினி, திருவண்ணாமலை

3. காகிதம் எரியும்போது சுருங்குவது எதனால்?

காகிதத்தாள் செல்லுலோஸ் இழைகளால் பின்னப்பட்டு, சுழலும் இரு உருளைகளுக்கிடையில் நன்கு அழுத்தப் பெற்றுத் தயாராகிறது. அப்போது காகிதம் ஈரத்தன்மை ஏதுமின்றி உலர்ந்து அதன் இழைகள் நன்கு விரிவடைந்து அந் நிலையிலேயே தங்கி விடுகின்றன. காகிதத்தின் செல்லுலோஸ் இழைகள் ஹைட்ரஜன் பிணைப்பான்களால் இறுக்கமாகி இருக்கும். அதனால் எரியும் போது பிணைப்பான்கள் தாறுமாறாகச் சிதறும். இதனால் சுருண்டு, பின்னர் சாம்பலாகும்.

- மு.ராம்பிரசாத், சங்கரன்கோயில்



நான் ரொம்ப சமத்து! அழவே மாட்டேன்

4. பத்து வரிகளுக்குள் ஒரு குட்டிக் கதை எழுதுங்களேன் பார்ப்போம்.



* மார்ட்டின் லூதர் கிங்




குழந்தை ஏன் பேசுவதில்லை?

முத்துவின் குதிரை!

முத்து என்பவன் உலகைச் சுற்றிப் பார்க்க விரும்பி, மிக வேகமாகச் செல்லும் குதிரையைத் தரும்படி கடவுளிடம் வேண்டினான். கடவுளும் ஒரு குதிரையைக் கொடுத்து ''இது 'அப்பாடா' என்றால் ஓடும் 'கடவுளே' என்றால் நிற்கும்'' என்றார். முத்து குதிரையிலேறி 'அப்பாடா' என்றதும் காடு, ஆறு எல்லாம் தாண்டி ஓடியது. மலையின் உச்சிக்கு வந்ததும் பயந்து 'கடவுளே' என்றான். குதிரை நின்றது. முத்து குனிந்து பார்த்தான். குதிரை இன்னும் இரண்டடி முன்னால் சென்று இருந்தால் பள்ளத்தாக்கில் விழுந்திருக்கும். ''அப்படி நடந்திருந்தால் பள்ளத்தில் விழுந்து உடல் சிதறியிருக்கும். தப்பித்தேன். அப்பாடா!'' என்றான். அவ்வளவுதான்! குதிரை பாய்ந்து விட்டது!



- த.யோகேஷ்,
முத்தூர்



ராமுவின் தாத்தா!

ராமுவின் தாத்தா வீட்டுக்கு முன்னால் இருந்த ஒரு பள்ளத்தை, மண்ணை அள்ளிப் போட்டு மூடிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ராமு "ஏன் தாத்தா தேவையில்லாமல் இந்த வேலையைச் செய்கிறீர்கள்?" என்று கேட்டான். "ராமு இந்தப் பள்ளம் அப்படியே இருந்தால் மழை வந்தால், தண்ணீர் தேங்கும். அதனால் கொசுக்கள் உற்பத்தியாகும். அது வீட்டில் நுழைந்து நம்மை கடிக்கும். அதனால் 'சிக்குன் குன்யா' போன்ற நோய்கள் வரும். அதனால்தான் இப்போதே பள்ளத்தை மூடிக் கொண்டிருக்கிறேன். இப்போது சொல், இது தேவையற்ற வேலையா?" என்று கேட்டார் தாத்தா. "இல்லை" என்ற ராமுவும் தாத்தாவுடன் சேர்ந்து பள்ளத்தை மூடத் தொடங்கினான்.

- வே.தனசேகர்,
கும்மிடிப்பூண்டி

உங்களுக்கு கார்டூன் வரையத் தெரியுமா? இன்றைய பிரபலங்களில் யாராவது ஒருவரை கார்ட்டூனாக வரைந்து அனுப்புங்கள்.

இம்மாதக் கேள்விகள் :

1. சதுப்பு நிலங்கள் என்றால் என்ன? தமிழகத்தில் இவை எங்குள்ளன?
2. சுதந்திர தினம் என்ற தலைப்பில் எட்டு வரிகளில் கவிதை எழுதுங்கள்.
3. உங்களுக்குக் கால இயந்திரத்தில் செல்லும் வாய்ப்பு கிடைத்தால் யாரைச் சென்று சந்திப்பீர்கள்? ஏன்?
4. நீங்கள் படித்து ரசித்த ஒரு நகைச்சுவையைச் சொல்லுங்கள்.
5. மணிப்பூர் மாநிலத்தின் தலைநகர் எது?

- ஒருவரே ஐந்து கேள்விகளுக்கும் பதில் எழுதலாம். ஆனால் ஒரு போஸ்ட் கார்டில் ஒரு கேள்வி - பதில் மட்டுமே இருக்க வேண்டும். 'அன்புடன் ஜக்கு' என்று குறிப்பிட்டு அனுப்பவும். முடிவு தேதி : 10.07.07

கார்டூன் வரைந்தவர் :
எம்.யோகராஜ், பத்தாம் வகுப்பு, டைமண்ட் ஜூப்ளி மேல்நிலைப் பள்ளி, ஈரோடு






பக்கத்துக்குப் பக்கம் சிரிப்பு வெடிகள்,
சிரிப்புச் சாதனையாளர்கள் பற்றிய தகவல்கள்,
சிறுகதை, படக்கதை, கட்டுரை எல்லாவற்றிலும்
கலகலப்பு!

இப்பவே கடைக்காரரிடம் சொல்லி வெச்சுடுங்க குட்டீஸ்!

தேன்மொழி – கனிமொழி

கருத்து, படம்;பிள்ளை




ஜாலி கேலரி
வேலைய முடிச்சிட்டு சீக்கிரம் வீட்டுக்குப் போகணும். அம்மா வடை சுட்டிருக்காங்களாம்!
மாவீரனைத் தாண்டி எவனும் வர முடியாதாக்கும்!
தவளை அண்ணே சீக்கிரம் போங்க கப்பல் கிளம்பிடப் போகுது!

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 - Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 - Registered as a Newspaper in Srilanka

